# தீபகச் சுடர்

பிப்ரவரி 2026
தீபம் 14 சுடர் 9
தீபகம் - தொன் போஸ்கோ நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம், 45, லேண்டன்ஸ் ரோடு, கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.



## சிறிய நோன்பு பெரிய அன்பு!

# தீபகத்திலிருந்து **இறையாசீர்**

அன்பான தீபகச் சுடர் வாசகர்களே,



## "சிறிய நோன்பு – பெரிய அன்பு!"

நோன்புக் காலம் என்பது உணவைத் தவிர்ப்பதற்கான காலமல்ல; அது **உள்ளத்தை மாற்றும் புனிதப் பயணம்.** இது "மனமாற்றத்திற்கான காலம்; மீட்பின் காலம்" இதுவே தகுந்த காலம் இன்றே மீட்பு நாள் (2 கொரி 6:2) என்று திருத்தூதர் பவுல் சொல்வதை மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ் நமக்கு நினைவூட்டுகிறார். நோன்பு என்பது **உறவுகளையும் குடும்பத்தையும் புதுப்பிக்கும் சிறந்த வழியாக** அமையும் என்பதை நமக்குத் தெளிவுப்படுத்துகிறார்.

### இதயத்தை வடிவமைக்கும் நோன்பு

மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதுபோல, உண்மையான நோன்பு என்பது சாப்பிடாமல் இருப்பதுமட்டுமல்ல, நமது **வார்த்தையாலும் உள்ளத்தளவிலும்** பிறரின் மனதைக் காயப்படுத்தாமல் இருப்பதாகும். காயப்படுத்தும் வார்த்தைகளிலிருந்து விலகி அன்பான சொற்களைப் பேசுவதும், கோபத்தைத் தவிர்த்து பொறுமையை வளர்ப்பதும், பிரிவினையைத் தவிர்த்து ஒற்றுமையைத் தழுவுவதுமே கடவுளுக்குப் பிரியமான நோன்பு.

இவ்வகை நோன்பு ஒரு **வாழ்க்கை மறைக்கல்வி.** குடும்பத்தில் குறை கூறுவதை கைவிட்டு நன்றியுணர்வை வளர்க்கும்போதும், கசப்புணர்வை மறந்து அமைதியை வளர்க்கும்போதும், நோன்புக் காலம் **கிறிஸ்தவ வாழ்வின் பள்ளியாக** மாறுகிறது.

### குடும்ப மையமான நோன்புப் பயணம்

இன்றைய உலகில் மனஅழுத்தங்கள், கவலைகள், சோதனைகளுக்கு நடுவில், இன்னலுறும் குடும்பங்கள் **கடவுளின்மீது நம்பிக்கை** வைக்க அழைக்கப்படுகின்றன. இதன் மூலம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு **முதல் மறைக்கல்வி ஆசிரியர்களாக** மாறுகிறார்கள்.

### சாம்பலிலிருந்து செயலுக்குத் திரும்புதல்

இறைவேண்டல், நோன்பு, தர்மம்: இவை ஒன்றோடொன்று இணைந்தவை. இவை நம்மை **ஒற்றுமை, இரக்கம், சமூக அன்பு** ஆகியவற்றை நோக்கி அழைத்துச் செல்கின்றன. திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவதுபோல, நோன்பு நம்மை சுயநலத்திலிருந்து விடுவித்து, ஏழைகள் மற்றும் துன்புறுவோரிடம் நட்புறவுக்கொள்ள வழி வகுக்கிறது.

இந்த நோன்புக் காலத்தில் இயேசு நம்மை தீய பழக்கவழக்கங்களை விட்டுவிட்டு நல்ல மதிப்பீடுகளை வளர்க்க அழைக்கிறார்.

## சாம்பலிலிருந்து செயலுக்குத் திரும்புதல்

- பிறரை புண்படுத்தும் வார்த்தைகளை விடுத்து அன்பான வார்த்தைகளை பேசலாம்
- கோபம் விடுத்து பொறுமையைக் கடைபிடிக்கலாம்
- முறையிடுதலை விடுத்து நன்றியுணர்வைக் காட்டலாம்
- சோகத்தை தவிர்த்து மகிழ்வாய் இருக்கலாம்
- சுயநலம் மறந்து உதவிபுரியும் நபராய் மாறலாம்
  அதிகமாகக் கைப்பேசி பயன்படுத்துவதைக் குறைத்து, அமைதியிலும், இறைவேண்டலிலும் நேரத்தைச் செலவிடலாம்

## ஏன் இப்படிப் நோன்பு இருக்க வேண்டும்?

ஏனெனில் இயேசு நம் இதயத்தை விரும்புகிறார். இந்த நோன்பு நம்மை **இயேசுவின் நண்பர்களாகவும், மற்றவர்களுக்கு ஒளியாகவும்** மாற்றுகிறது.

## நோன்பு குடும்பத்தில்தான் தொடங்க வேண்டும்

மேனாள் திருத்தந்தை பிரான்சிஸ் கூறுவது போல, **"குடும்பமே முதல் திருஅவை"** அதனால் நோன்புக் காலம் திருஅவையில் மட்டுமல்ல, வீட்டிலும் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

## குடும்பங்கள் எப்படி ஒன்றாக நோன்பு இருக்கலாம்?

- விவாதங்களைக் குறைத்து மன்னித்து வாழலாம்
- கவலைகளை மறந்து கடவுளில் நம்பிக்கையை அதிகப்படுத்தலாம்
- அதிக வேலையின் மத்தியில் குடும்பத்திற்கென்று நேரம் செலவிடலாம்
- அதிக டிவி, கைப்பேசி பார்ப்பதைக் குறைத்து இறைவேண்டலிலும் உரையாடலிலும் நேரத்தை செலவிடலாம்.

## ஒரு எளிய குடும்ப நோன்பு பயிற்சி

- மாலை நேரத்தில் ஒரு மெழுகுவர்த்தி ஏற்றி மன்றாடலாம்.
- திருவிவிலியத்திலிருந்து ஒரு அதிகாரம் வாசிக்கலாம்.
- அந்த நாளில் செய்த ஒரு நல்ல செயலைப் பகிரலாம்.
- ஒரு சிறிய மன்றாட்டுடன் முடிக்கலாம்.

இந்த நோன்புக் காலத்தில், நமது நோன்பு அன்பின் பயணமாக மாறட்டும். இந்நோன்பு நம்பிக்கையை புதுப்பித்து, குழந்தைகளை, இளைஞர்களை, குடும்பங்களை, நற்செய்தி மதிப்பீடுகளில் வேரூன்றச் செய்யட்டும். இந்த அன்பின் (நோன்பின்) பயணம், உயிர்ப்பின் திருநாளுக்கான தயாரிப்பாக மட்டுமல்லாமல், உயிர்த்த மக்களாய், உலகிற்கு ஒளித்தருபவர்களாக நம்மை மாற்றும்.

என்றும் அன்புடன்

*அருட்பணி.* **ஜேசுதாஸ்** *ச.ச*
*இயக்குநர் - தீபகம்*

## பகுதி 1 : வழிபாட்டு வழிகாட்டி


| | | |
|---|---|---|
| 01.02.2026 | பொதுக்காலம் 4வது ஞாயிறு- திருப்பலி | 06 |
| 02.02.2026 | ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா - திருப்பலி | 07 |
| 05.02.2026 | புனித ஆகத்தாம்மாள் - திருப்பலி | 08 |
| 07.02.2026 | புனித கொன்சாலோ கார்சியா - திருப்பலி | 09 |
| 08.02.2026 | பொதுக்காலம் 5வது ஞாயிறு- திருப்பலி | 10 |
| 09.02.2026 | அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ்- திருப்பலி | 12 |
| 10.02.2026 | புனித ஸ்கொலாஸ்திகா - திருப்பலி | 13 |
| 11.02.2026 | லூர்துநகர் புனித அன்னை மரியா- திருப்பலி | 14 |
| 14.02.2026 | புனிதர்கள் சிரில், மெத்தோடியஸ் ஆயர் - திருப்பலி | 15 |
| 15.02.2026 | பொதுக்காலம் 6ம் ஞாயிறு - திருப்பலி | 17 |
| 17.02.2026 | மரியின் ஊழியர் சபை நிறுவிய ஏழு புனிதர்கள் - திருப்பலி | 18 |
| 18.02.2026 | திருநீற்றுப் புதன் - திருப்பலி | 20 |
| 21.02.2026 | புனித பீட்டர் தமியான் - திருப்பலி | 21 |
| 22.02.2026 | தவக்காலம் முதல் ஞாயிறு - திருப்பலி | 22 |
| 23.02.2026 | புனித போலிக்கார்ப்பு - திருப்பலி | 24 |
| 25.02.2026 | புனித லூயிஜி வெர்சிலியா மற்றும் புனித கலிஸ்துஸ் கரவாரியோ - திருப்பலி | 25 |


## பகுதி 2 : நம்பிக்கையில் வளர...


| | |
|---|---|
| திருத்தந்தை 9ம் பயஸ் கண்ட சலேசியம் | 28 |
| திருநீறு அணிவோம் திருந்தி வாழ்வோம் | 31 |
| சிலுவைப் பாதை - சமூகமாய் ஒரு பயணம் | 34 |
| திருஅவைச் செய்திகள் | 45 |

## பகுதி-1

# வழிபாட்டு வழிக்காட்டி



# பொதுக்காலம் 4வது ஞாயிறு

திருப்பலி
01.02.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

I. *செப் 2: 3, 3: 12-13* II. *1கொரி. 1: 26-31* *மத். 5: 1-12*

இன்று நாம் ஆண்டின் பொதுக்காலம் 4ம் ஞாயிறை சிறப்பிக்க ஒன்று கூடியுள்ளோம். இன்றைய முதல் வாசகத்தில் இறைவாக்கினர் செப்பனியா ஆண்டவரின் கட்டளையை நேர்மையுடனும், மனத்தாழ்மையுடனும் கடைப்பிடிக்கும் எளியோர் யாவரும் அவரது சினத்திலிருந்து விடுபட்டு வஞ்சக செயல்கள் ஏதுமின்றி மந்தையைப்போல் சேர்ந்து வாழ்வார்கள் என்று கூறுகிறார். இரண்டாம் வாசகத்திலும் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமுகத்தில் புனித பவுல், நாம் அழைக்கப்பட்ட நிலையை எண்ணிப் பார்க்க கூறுகிறார். ஞானிகளையும், வலியோரையும் உயர்குடிமக்களையும் பற்றி அல்ல, மாறாக கடவுள் தேர்ந்தெடுத்த எவரும் பெருமை பாராட்டாதபடி வலுவற்றவை என உலகம் கருதுபவற்றை தேர்ந்தெடுத்து கொண்டார். கடவுளால்தான் நாம் அனைவரும் கிறிஸ்துவோடு இணைக்கப்பட்டுள்ளோம். பெருமைப்பாராட்ட விரும்பினால் கிறிஸ்துவை குறித்தே பெருமைப்பாராட்ட வேண்டுமென்று கூறுகிறார். நற்செய்தியாளர் புனித மத்தேயுவும் எளியோரின் பேறுபலன்களை குறித்து, மலைபிரசங்கத்தில் ஆண்டவர் போதித்த 8வகை பேறுபெற்றோரை முன்னிருத்தி பெருமை பாராட்டுகின்றார். உள்ளத்தூய்மையும், துயறுற்ற நெஞ்சமும், கனிவுடையோரும், இரக்கம் கொண்டோரும் பேறுபெற்றவராவர். அமைதி படைத்தவர்களாகவும் விண்ணரசுக்கு உரியவர்களாகவும் கடவுளை நேருக்குநேர் முகம் பார்ப்பவர்களாகவும் நமக்கு மலைபிரசங்கம் கூறுகிறது. ஆகவே இத்தகைய பேறுபலன்களை பெறுவர்களாக நாம் வாழ உள்ளத்துாய்மையுடன் இத்திருப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. துயருறும் உள்ளத்தோர் பேறுபெற்றோர் என்றுரைத்த எம் இறைவா, திருஅவையின் தூண்களான திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் அனைத்து திருநிலையினரும் செய்யும் பணியை ஆசீர்வதியும். இவர்கள் சந்திக்கின்ற சோதனைகளையும் உம் அருட்கரம் கொண்டு வழிநடத்தியருளும். மேலும் உம் இறையரசை வளர்த்தெடுக்க அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமுடையோர் பேறுபெற்றோர் என்றுரைத்த எம் இறைவா, ஏழ்மையில் வாடுவோரை இனம்கண்டு, அவர்களின் தேவைகளை நிறைவேற்ற தன்னிடமுள்ளவற்றை வசதியும் இல்லாமல் துன்புறும் ஏழை எளியவருக்கு உதவிக்கரம் நீட்ட பெரும் செல்வந்தர்களுக்கு

உதவும் உள்ளத்தை அளித்து அதன்மூலம் அவர்களும் உமது இரக்கம் பெற்றவர்களாக வாழ உம்மை மன்றாடுகிறோம்.

3. அமைதி ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர் என்றுரைத்த எம் இறைவா, இப்பரந்த பூவுலகில் மக்கள் போட்டி, பொறாமை, விட்டுக் கொடுக்காமை, பகையுணர்வோடு ஒருவரையொருவர் உயிரை மாய்த்துக் கொள்பவர்களை அமைதியுடன் வாழவும், நாட்டுக்கு நாடு வீட்டுக்கு வீடு என்ற அனைத்து தரப்பிலும்,உமது அருளால் ஒற்றுமையும், சமாதானமும், சகோதரத்துவமும் உண்டாகி பிரச்சனைகள் ஏதுமின்றி அமைதியுன் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. தூய்மையான உள்ளத்தோர் பேறுபெற்றோர் என்ற எம் இறைவா, உலகின் துயரங்களை ஏற்படுத்தும் பொறாமை, பேராசை, கொலை, பழிக்குப்பழி போன்ற தீய பண்புகளை விடுத்து, தூய்மையான உள்ளம் பெற்றவர்களாக, அன்பு, ஒற்றுமை, சமத்துவம், நீதி, நேர்மை போன்ற பண்புகளைப் பெற்றவர்களாக, இறையேசுவின் சாட்சிகளாக நாளும் வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா

திருப்பலி
02.02.2006

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

I. *மலாக். 3: 1-4* II. *எபி. 2: 14-18* *லூக். 2: 22-40*

இறை இயேசுவில் பிரியமானவர்களே, இன்று நம் தாய் திருஅவையானது, குழந்தை இயேசுவை கோவிலில் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட திருவிழாவை கொண்டாட நமக்கு அழைப்பு விடுக்கிறது. இயேசு பாலனை அன்னை மரியாவும் தூய யோசேப்பும் ஆலயம் சார்ந்த திருச்சட்டங்களுக்கும் ஒழுங்கு முறைகளுக்கும் கீழ்ப்படிந்தவர்களாய் இரண்டு மாட புறாக்களுடன் அவரை கோவிலில் காணிக்கையாக ஒப்புக்கொடுத்தனர். இத்தகைய பெருவிழாவை கொண்டாடும் நாம் நம்மை பற்றிச் சிந்திப்போம். திருஅவைக்கும், நமது பங்கிற்கும், நிறுவனத்திற்கும் அதன் சட்ட திட்டங்களுக்கும் விதிமுறைகளுக்கும் கீழ்ப்படிகின்றோமா, நம் குழந்தைகளை இறைபக்தியில் வளர்த்து, இறைவனுக்கு அர்ப்பணிக்கும் தாராள மனம் கொண்டவர்களாக நாம் வாழ்கின்றோமா? அல்லது இறைவனின் விருப்பப்படி செயல்படுகின்றோமா? சிந்திப்போம். நற்செய்தி வாசகத்தில் "ஆண்டவரே உமது சொற்படி உம் அடியான் என்னை இப்போது அமைதியுடன் போகச் செய்கிறீர். ஏனெனில் மக்கள் அனைவரும் காணுமாறு, நீர் ஏற்பாடு செய்துள்ள உமது மீட்பை என் கண்கள் கண்டுக்கொண்டன. இம்மீட்பே பிற இனத்தாருக்கு

வெளிப்பாடு அருளும் ஒளி, இதுவே உம் மக்களாகிய இஸ்ரயேலுக்குப் பெருமை” என்றார். ஆம், நாமும் ஆண்டவரின் வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து அவரின் சொற்படி வாழ்ந்தால் நமது வாழ்விலும் நிரந்தரமான பிரகாசமான ஒளியை நாம் காணமுடியும், எனவே இறைவனின் திருவுளப்படி நம் வாழ்வை அமைத்துக்கொண்டு அவர் வழியில் நாளும் வாழ்ந்தால் நாமும் இறையன்னையைப்போன்று நம் குழந்தைகளை வளர்க்க அருளைப் பெற வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் பங்கேற்போம். இறைவனின் அருளைப் பெறுவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு தந்தையே இறைவா, உம் மகன் காணிக்கையாக அர்ப்பணிக்கப்பட்ட இந்நாளை கொண்டாடும் இவ்வேளையில் தங்கள் வாழ்வையே பணியாற்ற காணிக்கையாக்கிய எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரையும் ஆசிர்வதியும். இவர்களுக்கு உமது பணியாற்ற போதுமான உடல் உள்ள பலத்தைக் கொடுத்து அவர்களை திறம்பட வழிநடத்த வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. வாழ்வும் வழியுமான இறைவா, தங்களது வாழ்வில் பல்வேறு நேரங்களில் வழிதவறி நடக்கும் இளைஞர் மற்றும் இளம் பெண்களுக்காக மன்றாடுகிறோம். இவர்களுக்கு நல்வழிக்காட்டி மீட்பின் பாதையில் அவர்கள் பயணிக்க வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. கருணையின் வடிவே எம் இறைவா, இங்கு கூடியுள்ள அனைவரையும் உம் திருமலர்ப்பாதம் சமர்ப்பிக்கின்றோம். நாங்கள் அன்னை மரி, தந்தை யோசேப்பு தங்களையே அர்ப்பணித்து வாழ்ந்ததுபோல எங்கள் வாழ்வில் இறைவனுக்காக வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# புனித ஆகத்தாம்மாள்

திருப்பலி
05.02.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

இயேசு கிறிஸ்துவில் பிரியமான சகோதர சகோதரிகளே, இன்று நாம் சிறப்பிக்கும் தூய ஆகத்தம்மாள் கி.பி. 251ல் வாழ்ந்தவர். கடவுளிடம் அன்பும், பக்தியும், கொண்டவர். உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவர். இவர் வாழ்ந்த நாட்டின் ஆளுநர் குயிந்தானூஸ் என்பவன் இவரது வசீகர அழகினால் கவரப்பட்டு பாவ வாழ்க்கைக்கு கட்டாயப்படுத்தினான். ஆனால் புனித ஆகத்தம்மாள் அவன் அழைப்புக்கு இணங்கவில்லை ஆதலால் அவரை சிறையில் தள்ளினான். தன்னுடைய வலையில் விழவைக்க வேறொரு

பெண்ணையும் அவரிடம் பேசவைத்தான். கற்புநெறியை உயர்வாக மதித்த நம் புனிதை மறுத்து விட்டதால் இவரின் மார்பகங்களை வெட்டும்படி கட்டளையிட்டு கொடூர செயலை புரிந்தான். ஆனால் இரவில் புனித இராயப்பர் இவருக்கு தோன்றி இவரை சுகப்படுத்தினார். மேலும் அந்த கொடூர ஆளுனர் இவரை கூரிய கற்களின்மீதும் எரியும் நிலக்கரியின் மீதும் உருட்ட செய்தான். அனைத்து தேவனைகளையும் சகித்துக்கொண்டு சிறையில் செபித்துக் கொண்டிருந்த வேளையில் இவரது உயிர் பிரிந்தது. தூய ஆகத்தம்மாள் செபித்த "இயேசு கிறிஸ்துவே அனைத்துக்கும் நீரே ஆண்டவர். நான் உங்கள் மந்தையின் ஆடு. சாத்தானை ஜெயிக்க என்னை தகுதியுள்ளவராக்கும்" என்ற வார்த்தைகளை மனதில் நிறுத்தி தூயவராக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் பக்தியுடன் செபிப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உலகின் ஒளியே இறைவா, எமது திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால்துறவியர், பொதுநிலையினர் அனைவரும் ஒன்றிணைந்து இறைவனின் அருள்பெற்று திருமுழுக்கின் மூலம் பெற்ற விண்ணக வாழ்வை, அகிலமெங்கும் பரப்ப அனைவரும் தகுதியுள்ளவர்களாகும் பொருட்டு தம் தகுதிக்கேற்ற கடமைகளை கண்ணுங்கருத்துமாக ஆற்றவேண்டிய மனோபாவத்தை தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. திக்கற்றவர்களின் சரணாலயமே இறைவா பசி, பிணி, பஞ்சம் இவைகளை தங்கள் உரிமைகளாக பெற்றுள்ள எளிய மக்களை இறை இரக்கத்தின் காலமாகிய இந்நாளில் கண்ணோக்கியருளும். கிடைக்கும் என்ற நம்பிக்கை உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களை கைவிடாதேயும். "நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, நான் உன்னை என்றும் கைவிடுவதில்லை" என்ற உம் திருவாக்கின்படி கருணைக்கூர்ந்து அவர்களை ஆசீர்வதிக்க உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதி அருள்கின்ற இறைவா, பிலாத்துவின் கொடூர தீர்ப்பினால் மாசில்லா மாணிக்கமான நீரே எங்களுக்காக பாடுகளை அனுபவித்து உயிர் துறந்தீர். தவறே செய்யாமல் சந்தர்ப்ப சூழ்நிலையினால் சிறையில் வாடும் ஒருசில மனித உயிர்களுக்கு இரக்கம் கொண்டு ஆறுதலும், தேறுதலும் தந்து மன அமைதியுடன் வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.



# புனித கொன்சாலோ கார்சியா

திருப்பலி
07.02.2026

## முன்னுரை

*திருமதி. தாமஸ்*

கிறிஸ்துவில் பிரியமானவர்களே, மும்பையில் உள்ள வசை நகரில் போர்த்துக்கீசிய தந்தைக்கும், இந்தியன் தாய்க்கும் பிறந்த புனித கொன்சாலோ கார்சியாவின் நினைவு நாளை நமது தாய்த்திருஅவை இன்று

கொண்டாடுகிறது. பிரான்சிஸ்கன் சபை சகோதரரான இவர் தொழுநோயாளிகளோடு சேர்ந்து பணியாற்றினார். இவரின் இறைப் பற்றுறுதியே இவரை புனிதராக உயர்த்தியது என்றால் மிகையாகாது. இவரின் தாழ்ச்சியும், பொறுமையும் இவரின் பணிகளில் வெளிப்பட்டது என்று இறைவனோடு நாம் ஒன்றித்து செயல்படுகிறோமோ அப்போதே நமது பணிகளும் தூய ஆவியின் வழி நடத்துதலோடு இருக்கும் என்பதை புனித கொன்சாலோ கார்சியாவின் வாழ்வில் காணலாம். எனவே, நாமும் நமது அன்றாட வாழ்வின் அசைவுகளை இறைத்திட்டத்திற்கு ஏற்ப இயக்கினால் நம் வாழ்வும் அன்பர் இயேசுவின் வாழ்வோடு இணையும். இதற்கு தடையாய் உள்ள நமது பலவீனங்களை நினைவு கூர்ந்து அதனால் ஏற்பட்ட பாவங்களுக்காக தந்தையாம் கடவுளிடம் மன்னிப்புக் கேட்டு இத்திருப்பலியில் பங்கு கொள்வோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பும் பொறுமையும் கொண்ட இயேசுவே, இன்றைய உலகில் அக்கிரமும், அராஜகமும் அதிகரிக்க காரணமான அன்பு பற்றாக்குறையை தீர்க்க நீர்தாமே உமது பிள்ளைகளான எங்கள் மூலமாய் நிபந்தனையற்ற அன்பை இந்த உலகிற்கு தர எங்களை பக்குவப்படுத்துமாறு இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. காணும் இடமெல்லாம் புதுப்புது நோய்கள் தோன்றும் அளவுக்கு சுற்றுச் சூழலை மாசுபடுத்தும் ஒவ்வொருவருக்காகவும் உம்மிடம் மன்றாடுகிறோம். உமது எல்லையற்ற அன்பினால் படைக்கப்பட்ட இந்த பூமியும் இயற்கையும் அழியா வண்ணம் நாங்கள் பாதுகாக்கும் ஞானத்தை எங்களுக்கு தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. என்றும் பரிவுடன் எங்களை காணும் நல்ல நண்பரான இயேசுவே, எதையாவது யாரிடமாவது எதிர்பார்க்கும் எங்களின் மனநிலையை மாற்றி, எப்போதும் எல்லோருக்கும் அன்புடனும், பரிவுடனும் கொடுத்து உதவும் மனநிலையை தந்திட இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# பொதுக்காலம் 5வது ஞாயிறு

திருப்பலி
08.02.2026

## முன்னுரை

*திரு. சாம்சன்*

I. *எசா. 58: 7-10* II. *1கொரி. 2: 1-5* *மத். 5: 13-16*

இறையேசுவின் அன்பு இறைச்சமூகமே, இன்றைய திருப்பலியில் இயேசு நீங்கள் மண்ணுலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும் இருங்கள் என்று கூறுகிறார். ஏனெனில் உப்பு உவர்ப்புத் தன்மையுடையது. உணவுக்கு சுவை சேர்க்கிறது. பொருட்கள் கெட்டுப்போகாமல் பாதுகாக்க பயன்படுகிறது. உப்பு தண்ணீரிலிருந்து தயாரிக்கப்பட்டு மீண்டும் தன்னையே தண்ணீராக

மாற்றிக்கொண்டு பலவகையில்மக்களுக்குப் பயன்படுகின்றது. இவ்வாறு ஒளி ஏற்றப்பட்டு, இருளகற்றப்படுகிறது. இவ்வாறுதான் இயேசுவும் மனிதனாகப் பிறந்து நமக்காக பாடுகள் பட்டு, இறந்து மீண்டுமாய் முழுமனிதராக நம்மில் வாழ்ந்துக்கொண்டிருகின்றார். இதைத்தான் தனது சீடர்களுக்கும் நீங்கள் உப்பாக இருந்து மக்களை நல்வழியில் வழிநடத்த வேண்டுமென்று கூறினார். மக்கள் தங்கள் பாவத்தைவிட்டு, கவலைகளை மறந்து, நோய்நொடிகளை தன்னம்பிக்கையோடு இறைவனிடம் சமர்ப்பித்து, புதிய மனிதர்களாக வாழவேண்டுமென்று இறைவன் விரும்புகிறார். மனிதர்கள் தனது வாழ்க்கையில் பிறருக்கென பல நல்ல காரியங்களை செய்கிறார்கள். தங்களிடம் இருப்பதை பிறரோடு பகிர்ந்து, தானதர்மங்களை செய்து, பலவிதமான தொண்டு நிறுவனங்கள் புரிவது போன்றவற்றில் ஒளியாகவும், உப்பாகவும் செயல்படுகிறார்கள். இத்தகைய செயல்களை செய்யும்போது பலவிதமான ஏளனமான வார்த்தைகளுக்கும், அவமானங்களுக்கும், துன்பங்களுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். இவர்கள் கடவுளின் விருப்பத்தை நிறைவேற்ற அனைத்தையும் துச்சமாக கருதி மகிழ்வோடு தங்களின் செயல்பாடுகளை செய்து வருகின்றார்கள். இப்படிப்பட்ட வாழ்வை நாமும் வாழத் தவறியிருந்தால் இன்றுமுதல் நானும் கடவுளின் திட்டத்தை நிறைவேற்ற செயல்படுவேன் என்ற முழு நம்பிக்கையோடு விடாமுயற்சியோடு செயல்பட இறைவனின் அருள்வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. நானே உலகின் ஒளி என்று கூறிய இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் கிறிஸ்தவ வாழ்க்கை என்பது மற்றவர்களுக்கு பயன்தரக்கூடிய உப்பாகவும், ஒளியாகவும், இருந்து மக்களின் வாழ்வை, இறைவனின் வழியில் நடத்திச்செல்லக்கூடிய அனைத்து ஆற்றலையும், சக்தியையும் தூய ஆவியாரின் அருட்கொடைகளை இவர்களுக்கு நிறைவாகப் பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. ஒளியாம் இறைவா, இருளகற்றி ஒளிக்கொடுப்பவரே, நாங்களும் எங்கள் வாழ்வில் இருளில் சிக்கித் தவிக்காமல், உம் ஒளியில் நடந்துவர எங்களின் பாவ வாழ்வை விட்டு, தீய நண்பர்களின் உறவை மறுத்து, எங்களிடையே இருக்கும் தவறான எண்ணங்களைக் களைந்துவிட்டு புதிய மனிதர்களாக, உமது ஒளியில் நடந்துவர தேவையான ஆற்றலையும் சக்தியையும் எங்களுக்கு அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நற்செய்தியின் நாயகரே எம் இறைவா, உலகம் முழுவதும் நற்செய்தியினை கொண்டுச் சென்று மக்களை உமக்கேற்ற வழியில் நாளும் நடக்க, நாங்கள் ஒரு ஊன்றுகோலாக இருந்து செயல்பட எங்களுக்கு உமது தூய ஆவியாரின் ஆற்றலை நிறைவாக பொழிந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. விண்ணுக்கும் மண்ணுக்கும் அரசரே எம் இறைவா, உமது திருச்சட்டத்தை கடைப்பிடித்து அதை கற்பிக்கிறவர் விண்ணரசில் மிகச் சிறியவராக நாங்கள் கருதப்படவும், திருச்சட்டப்படி அதை கற்பிக்கும் ஆற்றலை எங்களுக்கு அளித்து வழிநடக்க எங்களை உம் கருவிகளாக மாற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ்

திருப்பலி 09.02.2026

### முன்னுரை

*திரு. விக்டர்*

யூசேபியா பாலோமினா ஏனெஸ் 1899-ம் ஆண்டு டிசம்பர் 15-ம் நாள் ஸ்பெயின் நாட்டு சாலமானகா மாநிலத்தில் கோண்டால் பினோ என்ற குக்கிராமத்தில் பக்தியுள்ள உழைப்பாளிகள் குடும்பத்தில் பிறந்தார். 9-வது வயதில் புதுநன்மை வாங்கி இறையருளில் திளைத்தார். ஏழ்மையின் காரணமாக தனது படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டு குடும்பத்திற்கு உதவினார். ஞாயிற்றுக்கிழமைகளில் சலேசிய கன்னியர் நடத்திய ஆரட்டரிக்குச் சென்றார். தன்னையே முழுவதும் இயேசுவுக்கு அர்ப்பணிக்க முடிவு செய்து சலேசியக் கன்னியர் ஒருவரிடம் தனது ஆர்வத்தை வெளிப்படுத்தி அவரது வழிக்காட்டுதலால் சபையில் சேர்ந்தார். இவர் தம் வாழ்விலும் வார்த்தையிலும் விளங்கிய புனிதத்துவத்தை மாணவிகள் கண்டுணர்ந்தனர். இவர் இயேசுவின் இரக்கத்தையும் ஐந்து காயங்களைப்பற்றியும் அடிக்கடி எடுத்துரைத்தார். 1932-ம் ஆண்டு ஆஸ்மா நோயால் பீடிக்கப்பட்டார். மூன்றாண்டுகள் அந்நோயால் துன்பப்பட்டு 1935-ம் ஆண்டு பிப்ரவரி 10-ம் நாள் விண்ணக வாழ்வை அடைந்தார். 2004-ம் ஆண்டு ஏப்ரல் 25-ம் நாள் திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை அருளாளர் நிலைக்கு உயர்த்தினார். இவரின் விசுவாசம் பக்தி, இறைபயம் போன்றவற்றை நமது வாழ்விலும் கடைப்பிடித்து வாழ்ந்திட இத்திருப்பலியில் செபிப்போம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. புண்ணிய வாழ்வின் அடித்தளமே இறைவா, கொடிய வறுமைப் பிடியிலிருந்து, துவண்டு போகாமல், தளரா மனமும், விடாமுயற்சியும் கொண்ட சகோதரி யூசேபியாவைப்போல நாங்களும் எங்கள் அழைப்பின் மேன்மையை உணர்ந்து எந்நாளும் பிரமாணிக்கமாக வாழும் மனத்திடனைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. தூய வாழ்வின் பிறப்பிடமே இறைவா, தனது அன்றாட கடமைகளையும், வாழ்க்கைப் பணிகளையும் புன்முறுவலுடன் ஏற்று, அயராமல் உழைத்து தனது வாழ்வாலும், வார்த்தையாலும் புனிதத்தைப் பரப்பிய சகோதரி யூசேபியாவைப்போல நாங்களும் கடமைகளைச் செவ்வனே செய்து, புனிதமடைய வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

3. துறவற வாழ்வின் தூண்டுதலே இறைவா, சகோதரி யூசேபியாவைப்போல் தியாக உள்ளத்துடன் பணிபுரியும் சலேசிய சகோதரிகளை ஆசீர்வதியும். எண்ணற்ற இளம்பெண்கள் இறையழைப்புக்குச் செவிமடுத்து, துறவற வாழ்வினை மேற்கொண்டு, ஆர்வமுடன் பணிபுரிய வேண்டிய வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

# புனித ஸ்கொலாஸ்திகா

திருப்பலி
10.02.2026

## முன்னுரை

*திரு.T. சாம்சன்*

அன்புக்குரிய இறைமக்களே, நமது தாயாம் திருஅவை இவ்வுலக வாழ்வில் இறைவனோடு இணையில்லா வாழ்க்கை வாழ்ந்தவர்களை நமக்கு முன்னோடிகளாக பிரகடனப்படுத்துகிறது. அவ்வாறு, இன்றைய நாளில் நாம் நினைவு கூறுபவரான புனித கொலாஸ்திகா கி.பி. 480ம் ஆண்டு பிறந்தவர். இவர் புனித ஆசீர்வாதப்பரின் தங்கையாவார். தூய ஸ்கொலாஸ்திகா வாழ்ந்து வந்த கன்னியர் இல்லத்திற்கும், தூய ஆசீர்வாதப்பர் வாழ்ந்து வந்த துறவிகள் இல்லத்திற்கும் 5மைல் தொலைவு இருந்தது. கடவுளைப் பற்றியும் பரலோகத்தைப் பற்றியுமே இவர்கள் பலமுறை சந்தித்து பேசுவார்கள். ஒருநாள் பேசிக் கொண்டிருக்கும்போது அதிக நேரமாகி விட்டதால் ஆசீர்வாதப்பர் செல்ல முயன்றார். அப்போது தங்கை ஸ்கொலாஸ்திகா அங்கேயே தங்கும்படி கேட்டுக் கொண்டார். அவரோ மறுத்ததால் தங்கை கடவுளை மன்றாடினார். ஏனென்றால் தன் அண்ணன் ஆசீர்வாதப்பருடன் இதுவே கடைசி சந்திப்பு என்று அவர் உணர்ந்திருந்தார். அவருடைய மன்றாட்டை கடவுள் கேட்டார். இடியுடனும், சூறாவளி காற்றுடனும் மழை பெய்தது. கடவுளைப் பற்றி பேசுவதில் இருவரும் இரவு முழுவதையும் செலவழித்தார்கள். இடிமழை நின்றது, பொழுதும் விடிந்தது, காலையில் ஆசீர்வாதப்பர் தம் துறவிகள் இல்லத்திற்குச் சென்றார். மூன்று நாட்களுக்குப்பின் ஸ்கொலாஸ்திகா மரணமடைந்தார். அவருடைய ஆன்மா மாடப்புறா வடிவில் பரலோகத்திற்குச் செல்வதை ஆசீர்வாதப்பர் கண்ணால் கண்டு கடவுளுக்கு நன்றி செலுத்தினார். நாமும் இவ்வுலக வாழ்வில் பற்றுக்கொள்ளாமல், கடவுளைப்பற்றியும், நிரந்தர வாழ்வைப் பற்றியும் மனதில் கொண்டு பக்தியுடன் வாழ வரம்வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவருக்கே பணி செய்வாயாக (லூக். 4:8) என மொழிந்த இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் விசுவாச தளர்ச்சியும், மனச்சோர்வும் ஏற்படும்போது உயிருள்ள இறைவார்த்தை வழியாக எங்களைத் திடப்படுத்தும் ஞானத்தை அவர்களுக்கு அளிக்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

2. ஆண்டவரே எங்கள் ஒளி, அவரே எங்கள் மீட்பு என உணர வைத்த இறைவா, பசித்தவர்கள்மீது பரிவு கொண்டு அற்புதமாக உணவு தந்து பசியை நீக்கியதுபோல் இன்று பசியால் வாடும் கோடிக்கணக்கான மக்களின் துயரை துடைக்கவும், வறுமையை நீக்குவதற்கான வழிமுறைகளை நாடும் மக்களும் செயல்படுத்த அருள்புரியும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. "ஆண்டவர்மீது நம்பிக்கைக் கொண்டோர் பேறுபெற்றோர்" அன்புத் தந்தையே இறைவா, செவிடரைக் கேட்க வைத்தீர், ஊமையரை பேச வைத்தீர், ஆனால் நாங்களோ எல்லாமிருந்தும் உம் அருள் வார்த்தையை கேட்காமல் உம் நற்செய்தியை அறிவிக்காமல் உமக்கெதிராகப் பாவம் செய்து கொண்டிருக்கிறோம். வாழ்வளிக்க வந்தவர் நீரே என்றறிந்தும், செவிடரைப்போல், குருடரைப்போல், ஊமையைப்போல் வாழ்ந்து கொண்டிருக்கும் குருட்டு வாழ்க்கையிலிருந்து விலகி, இறையரசின் தெய்வீகப் பாதையில் வாழத் தேவையான வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

## லூர்துநகர் புனித அன்னை மரியா

**திருப்பலி**
11.02.2026

### முன்னுரை

*திரு. ஜீசஸ் மகுட மன்னன்*

உலக வல்லரசு நாடுகளில் ஒன்றான பிரான்ஸ் நாட்டில் நூறு ஆண்டுகளாக நடந்த உள்நாட்டுப் போரில் மக்கள் நிலைகுலைந்து சிதறி குழப்பத்துடன் வாழ்ந்து கொண்டிருந்தனர். பிரெஞ்சுப் புரட்சியில் தகுதியான தலைமை இல்லாது வழிதவறி தவித்தனர். நெப்போலியனின் போர் வெறி குணத்தால் நாடு தத்தளித்துக் கொண்டிருந்தது. இந்த நெருக்கடியான கால கட்டத்தில்தான், லூர்து நகர் எனும் ஊரில் மெசபியேல் மலைக்குகையில் அன்னை மரியா, சிறுமி பெர்னதெத் சௌபிரிஸ்க்கு 1858ம் ஆண்டு மார்ச் திங்கள் 25ம் நாள் காட்சி கொடுத்தார். காட்சியில் "நாமே அமல உற்பவம்" எனத் தம் பெயரையும் வெளியிட்டார். மக்களனைவரும் மனந்திரும்ப வேண்டும். தவம், செபம் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். மக்களுக்கு மாதா பக்தி அதிகமாக வளர்ந்தது. நாட்டில் அமைதியும் வளமான வாழ்வும், இறைவழிபாட்டில் நாட்டமும் அதிகரித்தது. சிதறிக் கிடந்த மக்கள் ஒன்று கூடி லூர்துநகர் நோக்கிப் பயணமாகினர். வாழ்க்கையில் வசந்தம் வீசுவதைக் கண்டு இறை இயேசுவுக்கு நன்றி கூறினர். திருத்தந்தை 9ம் பத்திநாதர் (the dogma of the Immaculate Conception of the Blessed Virgin Mary) 1854ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8ம் நாள் 200கர்தினால்கள், மற்றும் ஏராளமான ஆயர்கள் கூடிய அவையில் மரியா, ஜென்மப் பாவமில்லாமல் பிறந்தார் என்பதைப் பிரகடணப்படுத்தினார். நான்கே வருடங்களுக்கு பிறகு அன்னையே லூர்துநகரில் தோன்றி, "நாமே அமலோற்பவம்" என்று

அறிவிக்கப்பட்ட உண்மையை உறுதிப்படுத்தினார். அன்னை மரியா போன்று, லூர்து நகரின் தாரக மந்திரமான தவம் செய்வோம், செபம் செய்வோம். இந்த தவக்காலம் நம்வாழ்விலும் அர்த்தமுள்ளதாக, அன்னை மரியாவின் வழியில் அமைய இன்றைய திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இரக்கமே உருவான இறைவா, உமது இரக்கப்பெருக்கத்தால் கிறிஸ்துவின் மறை உடலாம் திருஅவையை பேணிக்காத்து, நவீன உலகில் மக்களோடு நெருக்கமாகி வழி நடத்திக் கொண்டிருக்கும் எங்கள் திருத்தந்தை பிரான்சீஸ், அவருடைய வழிகாட்டுதலில் வாழ்வை ஏற்று நடத்திச் செல்லும் ஆயர்கள், குருக்கள், கன்னியர், துறவியர், பொதுநிலையினர் அனைவரையும் இரக்கத்தின் யூபிலி ஆண்டில் நிறைவாக ஆசிர்வதித்து, நிறைவாழ்வை நோக்கித் தங்களின் மேலான அழைப்பிற்கேற்ப வாழ தூய ஆவியாரின் கொடைகளால் நிரப்பி வழி நடத்தி வாழ்வளிக்க வேண்டுமென்று தூய லூர்தன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. குணமளிக்கும் இறைவா, இன்றைய உலகில் பலவிதமான நோய்களால் துன்புறுவோரை உம்மிடம் ஒப்படைக்கின்றோம். வானக மருத்துவராகிய உம்மிடம் உடல்நோய், மனநோய், ஏழைகள், அனாதைகள், முதியோர், மருத்துவர்களால் கைவிடப்பட்டோர், அனைவரையும் உம் கையில் ஒப்படைக்கின்றோம். விசுவாசத்துடன் லூர்துநகர் செல்லும் அனைவரும், உம் இரக்கத்தின் அசீரை அன்னை வழியாகப் பெற்று, அளவில்லா மகிழ்ச்சியுடனும், சமாதானத்துடனும் உம் சித்தப்படி சாட்சிய மக்களாக வாழ லூர்தன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

3. இரக்கத்தின் தந்தையே, துன்புறுத்தப்படும் கிறிஸ்தவர்களுக்காக மன்றாடுகிறோம். நீர்தாமே அவர்களுக்கு ஆறுதலாக இருந்து அரவணைத்து விசுவாசத்தில் தடுமாற்றம் அடையாமல் வன்முறை, தீவிரவாதம், இனவெறி, பதற்றநிலை ஆகிய சூழ்நிலைகளை உம் திருப்பாடுகளோடு இணைத்து கிறிஸ்துவ சாட்சிய வாழ்வு வாழத் தேவையான வரமருள வேண்டுமென்று தூய லூர்தன்னை வழியாக உம்மை மன்றாடுகிறோம்.



## புனிதர்கள் சிரில், மெத்தோடியஸ் ஆயர்

திருப்பலி
14.02.2026

### முன்னுரை

*திருமதி. டிலைலா சேவியர்*

இறை இயேசுவில் பிரியமானவர்களே, இன்றைய புனிதர்களான புனித சிரில், மெத்தோடியுஸ் இருவரும் சகோதர்கள் இவர்கள் தெசலோனிக்கா என்ற ஊரில் உயர்ந்த குடும்பத்தில் தோன்றி இளமை முதல் இறைவனுடன் ஒன்றி வாழ்ந்து வந்தனர். சிரில் தமது அறிவுத் திறமையால் எல்லா

கலைகளையும் கற்றுத் தேர்ந்து, "வல்லுநர்" என்னும் பட்டத்தைப் பெற்றவர். பிறரின் ஆன்ம ஈடேற்றத்திற்காக உழைத்தவர். மெத்தோடியுஸ் துறவற நிலையைத் தெரிந்துக் கொண்டார். இருவரும் மக்களுக்கு மெய்மறையைப் போதித்தனர். பல்கேரிய நாட்டு மன்னன் தன்னுடைய புதிய அரண்மனைக்கு ஓவியக்கலையில் தேர்ந்த மெத்தோடியுசை ஒரு படத்தை வரையும்படி கேட்டுக் கொண்டான். மெத்தோடியுஸ் பொதுத்தீர்வை படத்தை வரைந்து அதன் பொருளையும், அரசனுக்கு விளக்கினார். அரசரும் நடுக்கத்தோடு மெய்மறையைத் தழுவி திருமுழுக்கு பெற்றார். இரு சகோதர்களும் பல நாடுகளுக்குச் சென்று, மிகுந்த ஆர்வத்தோடு இயேசுவைப்பற்றியும் மெய்மறையையும் போதித்தனர். கணக்கில்லாத மக்கள் மனம் திரும்பினர். இதைக் கண்ணுற்ற திருத்தந்தை இவர்களுக்கு ஆயர் பதவியை வழங்கினார். சிரில் உரோமுக்கு திரும்பிவரும் வழியில் நோயினால் இறந்தார். அதற்குப் பின் நீண்ட காலம் திருஅவைக்காக உழைத்த மெத்தோடியுஸ் பல எதிர்ப்புக்களைத் திருஅவைக்குள்ளேயே சந்தித்தாலும் அத்தகைய துன்பங்களின் இடையே ஸ்லாவிக் மொழியில் விவிலியம் முழுவதையும் மொழி பெயர்த்தார். இதன் பின்னர் புனித வாரத்தில் இறைவனடி சேர்ந்தார். இவ்விருவரைப் போல் சிரமத்தையும் களைப்பையும் பாராமல் கடவுளின் மகிமைக்காகவும் மக்களின் ஈடேற்றத்திற்காகவும் இறுதிவரை உழைப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. வார்த்தையான தெய்வமே இறைவா, உம் நற்செய்தியை பாரெங்கும் பறைசாற்ற உம் பணியை தொடர்ந்தாற்ற உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் உமது வழிநடத்துதலாலும், பாதுகாப்பிலும் தங்களின் மறைப்பரப்பு பணிகளில் ஏற்படும் எதிர்ப்புகள், பிரச்சனைகள், சோதனைகள் இவற்றிலிருந்து பாதுகாத்து, தங்களின் வாழ்வின் இறுதிவரை உமக்கு சாட்சியாக வாழும் வரம் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. அரவணைக்கும் அன்பு இறைவா, இளைஞர்கள் தங்களின் எதிர்பார்ப்புகளையும், முன்னேற்றங்களையும் அடைய உம்மை தேடவும் உம்மீது ஆழமான நம்பிக்கை வைக்கவும், தங்களால் இயன்றவரை பங்குத்தளங்களிலே இணைந்து தங்களுக்கு தரப்படும் தியானம், ஒப்புரவு அருட்சாதனம், ஆராதனை, நவநாட்கள் போன்றவற்றில் தங்களை ஈடுபடுத்த நல்மனதை தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமாக்கும் வல்லவரே இறைவா, உமது பணியினை ஆர்வத்தோடு செய்துவரும் அனைவரையும், குறிப்பாக பல நாடுகளில் இருக்கும் மறைப்பரப்பு பணிகள் செய்யும் திருப்பணியாளர்களை பல்வேறு நோய்களிலிருந்து பாதுகாத்து இவர்களுக்கு நல்ல ஆரோக்கியமான உடல்சுகமும், மனதில் உற்சாகமும், பாதுகாப்பும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# பொதுக்காலம் 6ம் ஞாயிறு

திருப்பலி
15.02.2026

## முன்னுரை

*திருமதி. லதா சுரேஷ்*

I. *சீஞா. 15: 15-20* II. *1கொரி. 2: 6-10* *மத். 5: 17-37*

இறையேசுவில், பிரியமான சகோதர சகோதரிகளே, சட்டம் ஒரு நாட்டின் கண்போன்றது. நாட்டின் வளர்ச்சியை உயர்த்துவதும் தாழ்த்துவதும் அந்நாட்டின் சட்ட ஒழுங்கை அடிப்படையாகக் கொண்டு அமைகின்றது. எங்கு குற்றங்கள் அதிகரிக்கின்றதோ அங்கு சட்ட ஒழுங்கை சரியாக பின்பற்றவில்லை என்று அர்த்தமாகும். அதற்காகத்தான் கடவுள் உலகைப் படைக்கும்பொழுதே சட்டத்தையும், ஒழுங்கையும், நடைமுறையில் பின்பற்றவேண்டுமென்று உருவாக்கினார். தான் படைத்த மனிதனிடம் எது தேவை, தேவையில்லை என்பதை சரியாக பின்பற்றக் கூறியும் இறைவனின் வார்த்தையை மீறியதால் அவரின் அருளையிழந்தான். மனிதனை வழிநடத்த மோசேயிடம் 10 கட்டளைகளைக் கொடுத்து தன்னோடு இணைத்துக் கொண்டார். இறைவன் அருளிய 10 கட்டளைகள் மக்கள் தொகைப் பெருக 30என்பது, 300 சட்டமாக மாறி பாரம்பரியமாக உருமாற்றம் பெறத் தொடங்கியது. இவையனைத்தையும் மாற்றி இறைமகன் இயேசு "ஒரே கடவுள், உன்னை அன்பு செய்வதுபோல் பிறரையும் அன்பு செய்" என்ற பிரதான கட்டளைகளை அளித்து, நம்மை மீட்டார். இதுவே தலையாயக் கட்டளை. கடவுளுக்கு ஏற்படையவராக மாற்றவல்லது. இறைவனின் திருச்சட்டத்தின்படி வாழ்ந்துக் காட்டினார். மனிதனால் இயற்றப்பட்ட சட்டங்கள் ஒவ்வொரு நாடுகளுக்கும் வேறுபடும். ஆனால் இறையரசின் சட்டம் ஒன்றே. இறைவனின் திருச்சட்டம் எத்தகைய உன்னதமாக இருக்கவேண்டும். எனவே அச்சட்டத்தை ஏற்று பணிந்து நடப்போம், இறையரசின் கடமைகளை நிறைவேற்ற இறையாசீரை இத்திருப்பலியில் பெற பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு தந்தையே இறைவா, இறையரசின் திட்டத்தை நிறைவேற்ற உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் மற்றும் பொதுநிலையினர் அனைவரையும் உம்பதம் சமர்ப்பிக்கின்றோம். தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை இறைவழியில் நாளும் நடத்திட வேண்டுமென்றும், இன்றைய உலகில் வழிதவறி செல்லாமல், தன்னுடைய ஆசைகளை அடக்கி, மனதை ஒருமுகப்படுத்திக்கொண்டு உம் திட்டப்படி செயல்பட இவர்களுக்கு தூய ஆவியாரின் துணையை அளித்து பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. கருணைக் கடலே எம் இறைவா, நாட்டையாளும் தலைவர்களுக்காக மன்றாடுகிறோம். விண்ணும் மண்ணும் ஒழிந்து போகுமுன் திருச்சட்டம் யாவும் நிறைவேறும். அதன் ஒரு சிற்றெழுத்தோ ஒரு புள்ளியோ ஒழியாது என்று கூறியவரே, இன்றைய நாட்டில் உள்ள அனைத்து தலைவர்களும்

தங்களுக்கென்று ஒரு சட்டத்தை வகுத்து, அதை மக்களிடத்தில் செயல்படுத்தி மக்களை அழிக்க நினைத்து செயல்படும் சுயநல தலைவர்களை நீரே உமது திருச்சட்டத்தையும், ஒழுங்குமுறைகளையும் நினைவுப்படுத்தி மக்களின் உரிமைகளை நிறைவாக கொடுத்து ஆசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. திக்கற்றவர்களின் சரணாலயமே இறைவா பசி, பிணி, பஞ்சம் இவைகளை தங்கள் உரிமைகளாக பெற்றுள்ள எளிய மக்களை இந்நாளில் கண்ணோக்கியருளும். கிடைக்கும் என்ற நம்பிக்கை உணர்வோடு வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களை கைவிடாதேயும். “நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை, நான் உன்னை என்றும் கைவிடுவதில்லை” என்ற உம் திருவாக்கின்படி கருணைக் கூர்ந்து அவர்களை ஆசீர்வதிக்க உம்மை மன்றாடுகிறோம்.

4. இளையோரின் வழிக்காட்டியே இறைவா, இளைஞர்கள் அவர்களது ஆற்றலையும், அவர்களது கிறிஸ்துவ பொறுப்பையும் உணர்ந்து நிறைவாழ்வை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை உணரச் செய்து, கத்தோலிக்க வாழ்க்கையில் உமது சாட்சிகளாக, வாழ்வதற்கான வரங்களை பொழிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

## மரியின் ஊழியர் சபை நிறுவிய ஏழு புனிதர்கள்

திருப்பலி
17.02.2026

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

இறையன்பர்களே, இன்று நாம் மரியின் ஊழியர் சபையை ஏற்படுத்திய ஏழு புனிதர்களை நினைவு கூறுகிறோம். அழிந்துபோகும் இன்பங்களில் அதிக ஈடுபாடு கொண்டிருந்த மக்கள் மத்தியில் இவ்வேழு புனிதர்களின் ஈடுபாடு இறைவன் மீதும், குறிப்பாக அன்னை மரியாள் மீதும் மிக அதிகமான பக்தி கொண்டிருந்தனர். பிறந்த பின் நம்மை நேசிப்பவர்கள் மத்தியில் தாய் நாம் கருவில் உருவான நாள் முதலாய், நம் உருவம் உருவாக தொடங்கும் முன் நம்மை நேசித்தவள். இப்படி அன்னையின் அன்பை பற்றி பேசினால் காலமும் நேரமும் போதாது. அதிலும் அன்னை மரியாளின் அன்பை பற்றி எடுத்துசொல்ல ஒரு யுகம் போதாது. கிறிஸ்தவ மக்களுக்கு தாயாக பாதுகாவலியாக பரிந்துரைப்பவளாக அன்றும் இன்றும் என்றும் இருப்பவர் அன்னை மரியா. இத்தகைய அன்னை மரியாவைத் தங்களின் மாதிரிகையாக கொண்டு இல்லற வாழ்வை விட்டு துறவு வாழ்வை மேற்கொண்ட ஆண்களும் பெண்களும் ஆயிரமாயிரம் பேர். அவர்களில் மிக சிறப்பானோர் மரியின் ஊழியர் சபையினர். **புனித பொன்பீலியூஸ், புனித அலேக்சிஸ், புனித அமதெயுஸ், புனித ஹக், புனித சொஸ்தெனுஸ், புனித மனெதுஸ், புனித போனகுந்தா** என்ற இந்த ஏழு புனிதர்கள் காலம் 13ம் நூற்றாண்டின் தொடக்ககாலம். கடவுளை மறந்து உலக வாழ்க்கை இன்பங்களிலும், மனம்

போன வாழ்விலும் நாட்டம் கொண்டிருந்த மக்கள் வாழ்ந்த பகுதி. இந்த எழுவரின் ஈடுபாடு இறைவன் மட்டில் இருந்தது. அதிலும் குறிப்பாக அன்னை மரியாள் மீது மிக அதிகமானபக்தி கொண்டிருந்தனர். இவர்களின் அதீத பக்திக்கு பரிசாக 1233ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 15 ம் நாள் அன்னையின் விண்ணேற்புப் பெருவிழா அன்று தூய மரியாள் எழுவருக்கும் காட்சி அளித்து துறவு மேற்கொள்ள அழைப்பு விடுக்கின்றார். மிக வசதியான செல்வ குடும்பத்தில் பிறந்த இவர்கள் தங்களது சொத்து சுகம் அத்தனையையும் ஒதுக்கி துறவு மேற்கொண்டனர். தங்களது நேரத்தையும் நாட்களையும் செபத்திலும் தவத்திலும் செலவழிக்க எண்ணி தனிமையான இடத்தை நோக்கி சென்றனர். இவர்களின் இந்த வித்தியாசமான வாழ்வு பலருக்கு வியப்பாக இருந்தது. எனவே இவர்களை தேடிச்சென்று பேச ஆரம்பித்தனர். தனிமையில் இறைவனுடன் உரையாடி செப வாழ்வு மேற்கொள்ள எண்ணிய இவர்களுக்கு பொதுமக்களின் வரவு மிகுந்த இடையூறாக இருந்தது. எனவே மொன்தே செனாரியோ என்னும் உயரிய மலைப் பகுதிக்கு சென்று தங்களுக்கென்று ஒரு ஆலயம் அமைத்து வாழ்ந்தனர். அன்னை மரியாள் ஒரு வானதூதரோடு மீண்டுமாக இவர்களுக்கு காட்சி அளித்து கருப்பு நிற ஆடையை கொடுத்து நான் உங்களை என்னுடைய ஊழியர்களாக தேர்ந்து கொண்டேன். இந்த கருப்பு நிற ஆடைதான் உங்களுடைய துறவற ஆடை என்று கூறி மறைந்து விட்டார். அன்றிலிருந்து இவர்கள் மரியின் ஊழியர் என்று அழைக்கப்படுகின்றனர். 1888 அம் ஆண்டு திருந்தந்தை 13ம் லியோ இவர்களை புனிதர்களாக அறிவித்தார். 789 ஆண்டுகளுக்கு முன்னர் தோன்றிய இச்சபை இன்று 26 நாடுகளில்117 குழுக்களில் கிட்டத்தட்ட 700 துறவிகளை கொண்டு இயங்கி வருகிறது. அழைத்தலின் மேன்மை, அன்னை மரியிடம் நமக்குள்ள பக்தி, குழுவாழ்வு, செப வாழ்வின் தேவை, பணி வாழ்வே அழைத்தலின் சிறப்பு, தபத்தின் தேவை, இறுதிப்பரிசு என்பன போன்ற எழு புனிதர்களின் அர்ப்பண உணர்வையும் தப வாழ்வையும் நமதாக்கிக் கொண்டு வாழ வரவேண்டி இப்பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தாயும் தந்தையுமான இறைவா, எம் தாய் திருஅவையின் பணியாளர்கள் அனைவரும் இந்த ஏழு புனிதர்கள் வாழ்ந்த சாட்சிய வாழ்வை வாழ்ந்து இறை மக்களை இறைவன் பால் ஈர்த்து புதுயுகம் புத்தாண்டில் மலர வளர உம்மை மன்றாடுகிறோம்

2. பாசத்தால் எம்மை ஈர்க்கும் இறைவா, உலக மக்கள் அனைவரும் ஓரணியில் திரண்டு உமது அன்பு வழியில் பயணிக்க வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. உறுதிப்படுத்தும் இறைவா மனம் போன போக்கில் குடும்பம், சமூகம், உலகு இன்ப நாட்டங்களில் மூழ்காமல் இறைப் பற்றில் ஆழமாக வேரூன்றி வாழ உமது இரக்கம் கருணை வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

# திருநீற்றுப் புதன் தவக்காலம்

திருப்பலி
18.02.2026

## முன்னுரை

*திரு. பிரான்சிஸ் அலாய்சியஸ்*

I. *யாவேல் 2: 12-18* II. *2கொரி 5: 20-6 : 2* *மத் 6: 1-6, 16-18*

இறையேசுவின் பிரியமுள்ள இறைச்சமூகமே, கடவுளுடன் புதுப்பித்தலைத் தேடும் பாவிகளாக நம்மை வெளிப்புறமாக அங்கீகரித்துக்கொள்ளும் இந்த நீண்ட பாரம்பரியம்தான் தவக்கால்தின் முதல் நாளான சாம்பல்புதன். மனந்திரும்புதலின் வெளிப்புற அடையாளமான சாம்பலை அணிந்துக்கொள்ள அழைக்கப்பட்டுள்ள இறைநம்பிக்கையாளர்களே, இறைவன்தரும் கொடையான மீட்பை நமதாக்கிக்கொள்ள நம்மை நாம் மனமாற்றத்திற்கு உட்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதையும் அதற்கரிய காலம் இந்தப்பொழுதே என்பதையும் இறைவன் நம்மோடு பேசுவதையே இறைவாக்கினர் யோவேல் முதல் வாசகத்தில் சுட்டிக்காட்டுகிறார். நற்செய்தியில், இந்த தவக்காலத்தில் நாம் செய்யும் அறச்செயல்கள் விளம்பரம் தேடும் காரிமாக இல்லாமல் இறைவனுக்கு மட்டும் தெரியும் ஓர இரகசியச் செயலாக இருக்கவேண்டுமென்றும், குன்றா விசுவாசத்துடன் நம் மனதை ஒருமித்து, இறைவனிடம் மன்றாடும்போது ஒப்புரவு அருளடையாளத்தைப் பெற்று இதயத்தை துப்புறவு செய்யும்போதும் இறைத்தந்தை மகிழ்ச்சியடைவார். அதன் பலனால் நிலைவாழ்வில் அவரை முகமுகமாய்த் தரிசிக்க முடியும் என்பதையும் அறிந்துக்கொள்கிறோம். "திரும்பி வருதல்" நம் வாழ்வின் மிக அவசியமானத்தேவை என்பதை திருத்தந்தை அவர்கள் வலியுறுத்துகிறார். திசைமாறித்திரியும் நம் வாழ்வு பயணத்திற்கு மீண்டும் ஓர நோக்கத்தையும், இலக்கையும் அளிப்புத தவக்காலமாகும். நூம் மீண்டும் தந்தையின் இல்லத்திற்கு திரும்புவது நமது பயணத்தின் முக்கிய இலக்காகும். அந்த இலக்கை அடையவேண்டிய அருளைப் பெற்றுக்கொள்ள இத்திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. இப்போது என்னிடம் திரும்பி வாருங்கள் என்றவரே, திருஅவையை வழிநடத்த எங்களுக்கு நீர் கொடையாக கொடுத்திருக்கும் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குரக்கள், துறவறத்தார் மற்றும் திருநிலையினர் அனைவரும் சவால்கள் நிறைந்த உலகில் உமது அழைப்பை ஏற்று இறையரசை கட்டியெழுப்ப அவர்களுக்குத் தேவையான அனைத்து பாதுகாப்பையும், எதிர்க்கொள்ளும் சவால்களை மனஉறுதியுடன் தந்து நேரிய வழியில் தங்களை பயன்படுத்திக்கொண்டுச் செல்ல உமது தூய ஆவியாரின் அருட்கொடைகளைத் தந்து வழிநடத்த வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. மனம்மாறி திரும்பி வாருங்கள் என்றவரே, இன்றைய மாயை உலகில்

வாழும் இளைஞர்கள், எவ்வழியில் நாங்கள் பயணிக்க வேண்டுமென்று பலர் வழித்தெரியாமல் தவிக்கும் இவ்வேளையில் அவர்களை உமது அருட்கரத்தால் ஆசீர்வதித்து உமது ஞானவொளியில் வழிநடத்திடவும், இத்தவக்காலத்தில் ஏழை, எளிய மக்களுக்கு எங்களால் இயன்ற உதவிகளைச் செய்து அவர்களின் வாழ்வில் வளமையும் செழுமையும் பெருக நாங்கள் ஊன்றுகொலாக இருந்து உதவியருள ஆண்டவரே உம்மை மன்றாடுகிறோம்.

3. கடவுள் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும் என்ற ஆசீரோடு குடும்ப உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே, இன்றைய சூழலில் வாழும் மக்கள் தங்களின் திருமண உறவின் அர்த்தத்தை உணராமல், நாகரீகமற்ற முறையில் தங்களின் வாழ்வை சீரழித்துக்கொண்டு, விவாகரத்துக்கும், தான்தோன்றித்தனமான வாழ்க்கை வாழும் மக்களை மன்னித்து, அவர்களின் வாழ்வை சீரமைத்துக் கொண்டு ஒற்றுமையோடும், நேர்மையோடும் ஒருவரையொருவர் மன்னித்து, விட்டுக்கொடுத்து வாழும் பரந்த எண்ணமும், இறையாட்சியின் விழுமியங்களை கடைப்பிடித்து வாழ வரமருள உம்மை மன்றாடுகிறோம்.

4. மருத்துவருக்கெல்லாம் மருத்துவரே எம் இறைவா, உடல்நோயாலும், மனநோயாலும் அவதியுறுவோரை உமது பாதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்களின் நோயினை நீக்கி, மனநலமும் உடல்நலமும் பெற்று தன்னுடைய குடும்பத்தோடு சமூகத்தோடு வளமான நிறைவான வாழ்வை இவர்கள் சுவைத்திட உமது அருட்கரத்தால் ஆசீரளித்து பாதுகாத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## புனித பீட்டர் தமியான்

திருப்பலி
21.02.2026

### முன்னுரை

*திரு. ஜெயராஜ்*

தூய பீட்டர் தமியான் 1007ஆம் ஆண்டு இத்தாலி தேசத்தின் ராவேண்ணா என்ற ஊரில் ஓர பெரிய குடும்பத்தில் பிறந்தார். அவருடைய இளமை பருவத்திலேயே தாயையும், தந்தையையும் இழந்தார். மூத்த சகோதரர் அவரை கொடுமைப்படுத்துவதைக் கண்ட அவருடைய குரவானவராகவுள்ள மற்றொரு சகோதரர் தமியானை படிக்க வைத்தார். அக்குரவானவரின் தமியான் என்ற பெயரை தன்னுடைய துணை பெயராக இணைத்து பீட்டர் தமியான் என்று அழைக்கப்பட்டார். தன் அண்ணனைப்போல் இவரும் குரவாகி புனித பெனடிக்ட் என்ற ஆசீர்வாதப்பரின் சபையில் இணைந்து ஏழ்மையைப் போக்கும் பணியில் தன்னை அர்ப்பணித்தார். போதனை செய்வதில் சிறந்து விளங்கினார். அவர் தன் தலைமையில் வேறு ஐந்து துறவற சபைகளை உருவாக்கினார். 1059ல் திருத்தந்தை 9ம் ஸ்டீபன், பீட்டர் தமியான் அவர்களை ஆயராக திருநிலைப்படுத்தினார்.அவருடைய தலைமையில் துறவற சபையினர்

தங்களை திருஅவையின் மதிப்பீடுகளின்படி அதில் நீடிக்கவும் அதன் வளர்ச்சிக்கான பணிகளில் தங்களை அர்ப்பணிக்கவும் வழிவகை செய்தார். 1067ல் பீட்டர் தமியான் தன்னை குரவானவர்களின் நிலையிலிருந்து விடுவித்துக் கொண்டு போண்டே அவலேனாவிலுள்ள துறவிகள் மடத்திற்கு திரும்பினார். 1072ம் ஆண்டு உடல்நிலை பாதிக்கப்பட்டு அத்துறவிகள் மடத்தில் பிப்ரவரி மாதத்தில் உயிர் நீத்தார். 1823ல் திருத்தந்தை 12ம் லியோ அவர்கள் புனித பீட்டர் தமியான் அவர்களை திருஅவையின் மருத்துவர் என்று பெயரிட்டு அவருடைய புனித நாளை மேற்கத்திய அனைத்து தேவாலயங்களிலும் சிறப்பாக கொண்டாட செய்தார்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. விண்ணகத் தந்தையே இறைவா, உம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட புனித பீட்டர் தமியானைப்போல எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குரக்கள் அனைவரும் தவறுகளையும் கலகங்களையும் எதிர்த்துப் போராடி திருஅவையைக் காத்து வழிநடத்திட அவர்களுக்கு நல்ல ஆற்றலைத் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.

2. நம்பிக்கையின் நாயகரே இறைவா, தம் மகன் ஈசாக்கைப் பலிகொடுக்க முயன்ற ஆபிரகாமைப்போல நாங்களும் எங்களது செயல்கள் மூலம் உம்மீதுள்ள நம்பிக்கையை வெளிப்படுத்த நல்ல ஆற்றலைத் தரும்படி உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்புத் தந்தையே இறைவா, எம் பங்கு மக்களின் குடும்பங்களில் உள்ள துன்பங்கள், நோய்கள், கவலைகள், கஷ்டங்கள், தாங்கமுடியாத சுமைகளை (பொறுப்புகள், கடமைகள்) இன்முகத்துடன் ஏற்றுக்கொண்டு இயேசுவின் பின்னால் செல்ல மனவுறுதியையும், வலிமையையும் தந்தருள உம்மை மன்றாடுகிறோம்.



# தவக்காலம் முதல் ஞாயிறு

திருப்பலி
22.02.2026

## முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

I. *தொ.நூ. 2: 7-9, 3: 1-7* II. *உரோ. 5: 12-19* *மத். 4: 1-11*

இறை இயேசுவில் அன்புக்குரியவர்களே, இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு இவை தான் நம் கிறிஸ்தவ வாழ்வின் அடிப்படையும், ஆணிவேரும் ஆகும். இவற்றைத் தான் நாம் நாள்தோறும் திருப்பலியில் நினைவுகூர்ந்து கொண்டாடினாலும் ஆண்டுக்கு ஒரு முறை சிந்தித்த, சீர்தூக்கிப் பார்க்க நம்மைத் திருஅவை அழைக்கிறது தவக்காலத்தின் வழியாக... இவ்வாண்டின் முதல் தவக்கால ஞாயிறைச் சிறப்பிக்க இத்திருப்பலியில் பங்கேற்க உங்களை அன்புடன் வரவேற்கிறோம். தவக்காலம் என்றவுடன் ஏதோ கவலையோடும், வருத்தத்தோடும் காட்சி கொடுப்பது என்பதல்ல. மாறாக இதுவே

நம்பிக்கையின் காலம். இறைவனின் இரக்கத்தைச் சுவைக்கும் மகிழ்ச்சியின் காலம். ஒப்புரவின் நல்ல காலம். நிலைவாழ்வுக்கு உரமிடும் காலம். மனித வாழ்வில் சோதனை என்பது ஒரு தொடர்கதை. மனிதன் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் அது மானிடரின் உள்ளத்தை வருடிக்கொண்டே இருக்கிறது. ஆனால் அந்தச் சோதனைகளையும் வென்று சாதனை படைத்த நிகழ்வுதான் இன்றைய நற்செய்தி. இயேசு செய்த அரும்பெரும் சாதனை. ஆதிப்பெற்றோரின் அடிமைத்தனத்தால் பாவ வாழ்வில் நாமும் பாவநிலைக்கு இட்டுச் செல்லப்படுகின்றோம். ஆனால் இரண்டாம் ஆதாமாகிய கிறிஸ்துவின் வருகையில் பாவநிலையிலிருந்து வெற்றிப் பெற்ற புதுவாழ்வுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றோம். இறைவார்த்தை இயேசுவுக்குச் சோதனைகளை வெல்ல உறுதுணையாக இருந்தது. எனவே நாமும் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுப்போம். இல்லையேல் “உங்களுக்கு மறைநூலும் தெரியாது. கடவுளின் வல்லமையும் தெரியாது” என்ற பரிசேயர்களைப் பார்த்துச் சொன்ன இயேசு நம்மையும் பார்த்துச் சொல்லுமுன் விழிப்புடன் செயல்படுவோம். இயேசுவைப் போல நாமும் நமது சோதனைகளை இறைவார்த்தை வழியாக, இடைவிடா செபத்தின் வழியாக, நீங்காத இறைநம்பிக்கை வழியாக வெற்றி கொள்ள இறையருளை வேண்டி பலியில் இணைவோம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவர்மீதும் தூய ஆவியாரின் வரங்களைப் பொழிந்து, திருஅவையினரை இத்தவக்காலத்தில் உண்மையான மனமாற்றத்திற்கு வழிகாட்டும் வல்லமையைத் தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கமே உருவான இறைவா, இன்றைய நாளில் நாங்கள் மேற்கொள்ளும் எல்லா நற்காரியங்களும் எங்களுடைய பாவங்களுக்குப் பரிகாரமாகவும், உம்முடைய கல்வாரி தியாகப் பலியின் பலன்களால், உம்மை என்றென்றும் நேசிக்கவும், எந்தச் சூழ்நிலையிலும் உம்மைவிட்டு விலகாதிருக்கவும் வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பே இறைவா, தேவையில் இருப்போருக்கு உதவும் போதெல்லாம் உமக்கே உதவி செய்கிறோம் என்ற மனித நேய மனநிலையையும், நாங்கள் எங்களுக்காக மட்டும் வாழாமல் பிறரின் துன்பம் என்னும் சிலுவையைத் தாங்கும் மனதையும், எங்களை காயப்படுத்தியவர்களை மன்னிக்கும் மனப்பான்மையையும் தரவேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. வாழ்வளிக்கும் வள்ளலே இறைவா, தவக்காலத்தின் அறச்செயல்களான நோன்பு, தர்மம், செபம் போன்ற நற்பண்புகளை மகிழ்ச்சியோடு பின்பற்றி இவைகளின் வழியாக இறையன்பையும் பிறரன்பையும் எம்மில் வளர்த்திட அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

# புனித போலிக்கார்ப்பு

திருப்பலி
23.02.2026

## முன்னுரை

*திருமதி. ராணிசம்பந்தன்*

அன்புக்குரியவர்களே, இன்று திருஅவையானது இரண்டாம் தலைமுறைத் தலைவர்கள் குழாமைச் சார்ந்த தூய போலிக்கார்ப் அவர்களின் விழாவை கொண்டாடுகிறது. இவர் நற்செய்தியாளர் யோவானின் சீடராவார். ஸ்மிர்னா நகர ஆயராக இருந்தவர். 156ம் ஆண்டு பிப்ரவரி 23ம் நாள் இப்புனிதரை படுகொலை செய்தனர். மக்கள் உடலைக் கொண்டுபோய் வணங்கி இன்னும் அதிகமாக கிளர்ந்தெழுவார்கள் என்று கருதிய அரசன் உடலைக் கொடுக்காமல் தீயிட்டு எரிக்க ஆணையிட்டான். இப்புனிதரின் மறைசாட்சியத்தை நினைவுப்படுத்தவும், கிறிஸ்துவ நம்பிக்கைக்காக மறைசாட்சிகளை தயார்ப்படுத்தவும் இவரது எலும்புகளை மக்கள் எடுத்துச்சென்றார்களாம். இன்றைய நற்செய்தியில் இயேசு கூறுகிறார் பலிப்பொருள் உப்பால் தூய்மையாக்கப்படுவதுபோல் ஒவ்வொருவரும் நெருப்பால் தூய்மையாக்கப்படுவர் (மாற்கு 9:49). இங்கே நெருப்பு என்ற வார்த்தைக்கு தூய ஆவியை நாம் ஒப்பிடலாம். தூய ஆவியானவர் நம்மை இறைவனுக்கு ஏற்ற பலிப்பொருளாக மாற்ற உதவிசெய்வார். தினமும் ஒரு புனிதரை திருஅவை நினைவில்கொண்டு சிறப்பாக செபிக்கிறது. இப்புனிதர்கள் தங்களையே தூய ஆவியிடம் கையளித்து இறைவனுக்கு ஏற்ற பலியாய் மாறினார்கள். நாமும் இறைவனுக்கு ஏற்ற பலிப்பொருளாய் மாற தொடர்ந்து இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. தூய்மையின் திருஉருவே இயேசுவே, திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் நம்பிக்கையற்றோருக்கு நம்பிக்கையாகவும் சோர்வுற்றோருக்கு பலமாகவும், திகழ்ந்து உமக்காக வாழும் வரத்தை தந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, உமது இறைவார்த்தையை உலகுக்கு எடுத்துரைக்க இறைவாக்கினரை ஏற்படுத்தி, நற்செய்தியை உலகெங்கும் சென்று அறிவிக்க அனுப்பிவைத்தார். உம் வாக்கை அன்புடனும் தாழ்ச்சியுடனும் கேட்டுக் கீழ்படிந்ததுபோல, நாங்களும் கடைப்பிடித்து வாழும் மக்களாக நாங்கள் வாழ உம்மை மன்றாடுகிறோம்.

3. மனிதரால் புறக்கணிக்கப்பட்ட இயேசுவே, உம்மை அறியாத மக்களால் நாங்கள் புறக்கணிக்கப்படும் போது அவர்களை வெறுக்காமல் அவர்களுக்காக மன்றாடும் மனதை தர வேண்டுமென்றும் அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் உண்மையான அன்பின் மக்களாக வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## புனித லூயிஜி வெர்சிலியா மற்றும் புனித கலிஸ்துஸ் கரவாரியோ

**திருப்பலி**
**25.02.2026**

### முன்னுரை

*திரு. ஜான் அலெக்ஸ்*

அன்புக்குரியவர்களே, புனிதத்தை நோக்கிய பயணத்தில் சலேசிய ஆயர் வெர்சீலியா மற்றும் தந்தை கரவாரியோ, சீன மண்ணில் பூத்த தியாக மலர்கள் ஆவர். தொன் போஸ்கோவின் சீன மறைப்பணியின் கனவை நினைவாக்கியவர்கள். 1905ல் சீன மறைப்பணிக்காக முதன்முதலாக ஒரு சலேசிய குழு, பணி வெர்சீலியா தலைமையில் சென்றது. சலேசியர்களின் சிறப்பான பணிக்கு சாட்சியாக அங்கு ஒரு மறைமாவட்டம் உயிர்பெற்றது. அதன் முதல் ஆயராக வெர்சீலியா நியமிக்கப்பட்டார். 1922ல் அவரை சந்தித்த சில இளம் துறவற சகோதரர்களில் ஒருவர் சீன மறைப்பணிக்காக தாமும் ஆயருடன் செல்ல விருப்பம் தெரிவித்து 1924ல் மறைப்பணியாளராக சீனா சென்றார். அந்த அருட்சகோதரர் கரவாரியோ ஆவார். 1929ல் ஆயர் வெர்சீலியாவின் திருக்கரங்களால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். சீனா, திருஅவைக்கு எதிராக கடுமையாக மாறிக்கொண்டிருந்த காலம் அது. குறிப்பாக தந்தை கரவாரியோ பணியாற்றும் லின்ச்சோ மிகவும் கலவரத்திற்குட்பட்ட பகுதி. 1930 பிப்ரவரி 24ல் தந்தை கரவாரியோ, 2 இளம் வேதியர்கள், 3 இளம் பெண்கள் ஆகியோர் அடங்கிய குழுவுடன் ஆயர் வெர்சீலியா, லின்ச்சோ சென்றார். அப்பயணத்தின்போது வழிக்கொள்ளையர் கூட்டம் அவர்களை முற்றுகையிட்டது. அக்கொள்ளையர்களின் தீயக்கண்கள் குழுவில் இருந்த இளம் பெண்கள்மீது விழ, அவர்களையும் மற்றவர்களையும் காப்பாற்ற துணிச்சலாக நின்ற ஆயரும், தந்தை கரவாரியோவும் சுட்டுக் கொள்ளப்பட்டனர். 2000ல் திருஅவை இவர்களை புனிதநிலைக்கு உயர்த்தியது. நமக்கு கொடுக்கப்பட்டுள்ள அழைப்பை நாம் முழுவதுமாக உணர்ந்து வாழ வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

### நம்பிக்கையாளர்களின் மன்றாட்டு

1. அன்பு இறைவா, புனிதர்களாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம் என்பதை எமது வாழ்வில் உணர்ந்து, எல்லோரையும் ஒன்றிணைத்து எல்லோருக்கும் அடிப்படையாக அமையும் சலேசிய ஆன்மீகத்தை எமக்கு வாழ்வாக்கிய புனிதர்கள் வெர்சீலியா மற்றும் கரவாரியோ முன்மாதிரியில் பல இளையோரை இறை அழைத்தலில் நிலைபெற செய்ய வேண்டிய அருளைப்பொழிந்தருள இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. மன்னிப்பின் தலைவரே, தீயை மூட்டவே வந்தேன், அது இப்போதே பற்றியெரிய விரும்புகிறேன் என்றவரே, மனித நேயத் தீ எம்மில் பற்றி எரியவும் சமத்துவம் சகோதரத்துவம் மலர வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. அன்பின் அடைக்கலமே இறைவா, அனைத்திலும் சிறந்தது அன்பே என்பதை அறியும் நாங்கள் எங்கள் குடும்பங்களில், சமுதாயத்தில், வேலை செய்யும் இடங்களில் உண்மையான அன்பின் மக்களாக ஒவ்வொருவரும் வாழ வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம். மறைப்பணிக்காக தங்களை அர்ப்பணித்துள்ள எம் சலேசிய துறவிகளை திடப்படுத்தி ஆசீர்வதித்து அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களை திறம்பட வழிநடத்த தேவையான அருளை தந்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்



பகுதி-2

# நம்பிக்கையில் வளர...



# திருத்தந்தை 9ம் பயஸ்
## கண்ட சலேசியம்

*திரு. ஜான் அலெக்ஸ்*

ஜோவானி மரிய மஸ்தாய் பெரட்டி என்ற பெயர் பலருக்கு நினைவிருக்கிறதோ இல்லையோ, மறைபணியாளர்களாக தங்கள் வாழ்வை அர்ப்பணித்துக்கொண்டவர்களுக்கு நிச்சயம் இருக்கும். பல்வேறு இன்னல்கள் மத்தியில் 1819ல் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டவர், 1823ல் சிலி நாட்டுக்கு மறைபணியாளராக சென்றார். தனது 35ம் வயதில் "பொலெட்டோ உயர் மறைமாவட்டத்தின்" பேராயராக சிறப்பாக பணியாற்றினார். வருங்கால திருஅவை வரலாற்றில் பல்வேறு சாதனைகளை படைக்க போகிறவர் என்பது யாரும் அறிந்திராத உண்மை. 1846ல் கர்தினாலானவர், 50 வாக்குகளில் 36 வாக்குகள் பெற்று தனது 54ம் வயதில் "9ம் பயஸ்" என்ற பெயரை ஏற்று, திருத்தந்தையாக தேர்ந்தெடுக்கப்பட்ட உடனேயே திருஅவை நிர்வாகத்தில் எழுத்து (பத்திரிக்கை) சுதந்திரம், போன்ற பல்வேறு ஆரோக்கியமான மாற்றங்களையும் புதுப்பித்தல்களையும் கொண்டு வந்தார். திருஅவையில் மட்டுமல்ல சலேசியர்களுக்கும் இவரது பங்களிப்பு மகத்தானது. எனவேதான் தொன் போஸ்கோவின் வாழ்வில் மறக்க முடியாத, தவிர்க்க முடியாத திருத்தந்தையாக திகழ்கின்றார்.

**சலேசிய சபை மீதான தனது ஆர்வம் :** தொன் போஸ்கோ 1858ல் முதன்முதலாக திருத்தந்தை 9ம் பயஸ் அவர்களை சந்தித்தார். "ஒரு புனிதரை சந்தித்த உணர்வு" அந்த முதல் நிகழ்விலேயே இருவரின்

உள்ளத்திலும் எழுந்தது குறிப்பிடத்தக்கது. சலேசிய சபையை நிறுவுவதற்கு தனது பெரும் ஆதரவும் வழிகாட்டுதல்களையும் தந்து ஊக்குவித்தார் திருத்தந்தை 9ம் பயஸ். அன்றைய காலச் சூழலுக்கு ஏற்ப முதலில் சலேசிய சங்கம் என்ற அடிப்படையில் துவங்கி, விமரிசையாக இல்லாமல் எளிமையான வார்த்தைப்பாடு, சாதாரண துறவற உடை மற்றும் கடுமையான ஆனால் அன்றாட நடைமுறையில் கடைப்பிடிக்கும் சலேசிய ஆன்மீகத்தை மேற்கொள்ள காரணமானார். அதுமட்டுமல்ல, வருங்கால சலேசியர்களின் ஆன்மீக பாரம்பரியத்திற்கென, சலேசிய ஆன்மீகம், வாழ்வுமுறை மற்றும் தனிவரத்தினை தொகுத்து நினைவலைகளாக எழுதிட வேண்டும் என்று தொன் போஸ்கோவிற்கு தனது கட்டளையாக வைத்தார் திருத்தந்தை 9ம் பயஸ்.

**தொன் போஸ்கோவின் திருத்தந்தை :** சலேசிய சபையின் ஒழுங்குமுறைகளையும், சலேசிய அருட்சகோதரிகளின் சபை மற்றும் சலேசிய உடனுழைப்பாளர்கள் இயக்கத்தையும் அதிகாரப்பூர்வமாக அங்கீகரித்தவர் திருத்தந்தை 9ம் பயஸ். மேலும் சலேசிய உடனுழைப்பாளராக தன்னை இணைத்துக்கொண்ட முதல் உறுப்பினரும் ஆவார். பல்வேறு தியாகங்களை துன்பங்களை ஏற்கும் நிலை வந்தபோதும் தளராமல், திருத்தந்தை 9ம் பயஸ் கொடுத்த அறிவுரை மற்றும் வழிகாட்டுதல்களுக்கு அப்படியே கீழ்படிந்தார் தொன் போஸ்கோ. இது திருத்தந்தை மீது தொன் போஸ்கோ கொண்டிருந்த அளவற்ற அன்பைக் காட்டுகிறது. அதே போன்று திருத்தந்தையும் தொன் போஸ்கோ மீது எந்த அளவுக்கு நம்பிக்கையும் அன்பையும் கொண்டிருந்தார் என்றால், இக்கட்டான சூழல்களில் தொன் போஸ்கோவை உரோமைக்கு அழைத்து அவரது ஆலோசனைகளையும் உதவியும் நாடும் அளவுக்கு இருந்ததை நாம் காணலாம்.

**சலேசியர்களின் நண்பராக மாறிய திருத்தந்தை :** தொன் போஸ்கோவும் அவரது சலேசியர்களும் தம்மீது வைத்துள்ள அளவற்ற பாசத்தை எண்ணி வியந்த திருத்தந்தை 9ம் பயஸ், சலேசிய ஆரட்டரி மாணவர்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று கருதினார். "உமக்கும் உமது சலேசியர்களுக்கும் எவையெல்லாம் தேவையோ அவற்றையெல்லாம் இந்தத் திருத்தந்தை கவனத்தில் கொண்டுள்ளார். தனிப்பட்ட கோரிக்கை ஏதும் இருந்தால் சொல்லும்" என்று விடை பெற காத்திருந்த தொன் போஜ்கோவிடம் திருத்தந்தை கூறினார். "தங்களது மேலான ஆசீரைவிட நான் வேறு எதைக் கோரப்போகிறேன்?" என்றார் தொன் போஸ்கோ. அதற்கு திருத்தந்தை "உமக்கு எனது ஆசீர் நிறையவே உண்டு. ஆனால் உனது சிறுவர்களுக்கு ஏதாவது தர வேண்டுமே" என்று சொல்லிக் கொண்டே பணப்பையில் இருந்து அள்ளி எடுத்ததை எண்ணாமல் அப்படியே தொன் போஸ்கோவிடம் கொடுத்து, "திருத்தந்தை பெயரால் உமது சிறுவர்களை ஓர் இன்பச் சுற்றுலா அழைத்துச் செல்லும்" என்றார்.



தொன் போஸ்கோவும் அந்த சுற்றுலாவை சிறுவர்கள் மறக்காதிருக்கும் வண்ணம், அவர்கள் கேட்டதையெல்லாம் மகிழ்ச்சியோடு அப்படியே வாங்கிக் கொடுத்தார். சிறுவர்களின் களிப்பிற்கு அளவே இல்லை. "தந்தையே சும்மா கண்ணை மூடிக்கிட்டுச் செலவழிக்கிறீர்களே, இதற்கெல்லாம் உங்களுக்கு காசு ஏது?" என்று சிறுவர்கள் கேட்க, "திருத்தந்தை உங்களுக்கு நண்பராயிட்டார். இது திருத்தந்தையின் சுற்றுலான்னு சொல்லச் சொன்னார்" என்றார் தொன் போஸ்கோ.

**திருஅவை வரலாற்றில் மறக்க முடியாத திருத்தந்தை :** அமல உற்பவ கோட்பாட்டினை டிசம்பர் 8, 1854ல் பிரகடனப்படுத்தியவர். முதல் வத்திக்கான் சங்கத்தை 1869ல் கூட்டியவர், 1870 டிசம்பர் 8ல் புனித யோசேப்பை திருஅவையின் பாதுகாவலராக அறிவித்தவரும், 1875 ஜூன் 16ல் திருஇருதய ஆண்டவருக்கு திருஅவையை அர்ப்பணித்தவரும் 32 ஆண்டுகாலமாக திருஅவையை வழிநடத்தியவருமான இந்த திருத்தந்தை 9ம் பயஸ் 1878 பிப்ரவரி 7ம் நாள் மறைந்தார். இவரோடு திருத்தந்தை 23ம் யோவானயும் சேர்த்து செப்டம்பர் 3ம் நாள் அன்றைய திருத்தந்தை 2ம் யோவான் பவுல் திருஅவையில் அருளாளர் நிலைக்கு உயர்த்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.



# திருநீறு அணிவோம்
## திருந்தி வாழ்வோம்

*திரு. அகஸ்டின்*

ஒவ்வொரு ஆண்டும் தவக்காலத்தின் முதல் நாளை கத்தோலிக்கர் அனைவரும் நெற்றியில் சாம்பலைப் பூசிக் கொண்டு தவக்காலத்தைத் தொடங்குகிறோம். சாம்பல் என்பதன் மற்றொரு சொல் நீறு என்பதாகும். திருநீறு என்று அழைக்கின்ற வேளையில், அது புனித சாம்பல் என்னும் பொருளைத் தருகிறது. சாம்பலில் புனிதம் இருக்கிறது என்பதை விடவும், சாம்பலால் சிலுவை அடையாளம் பெறுகிற நாம் புனிதத்தில் வாழ அழைப்பு பெற்றுள்ளோம் என்பதையே திருநீறு உணர்த்தி நிற்கிறது. ஆகவேதான், இந்நாள் திருநீற்று புதன் என்ற பெயரால் அழைக்கப்படுகிறது. அரசர்கள் காலத்தில் இருந்தே இஸ்ரயேல் நடுவே சாக்கு உடை அணிந்து. சாம்பலில் அமர்ந்து, கடவுளிடம் மன்னிப்பு கேட்கின்ற வழக்கம் இருந்தது. "அவர்கள் நோயுற்றிருந்த பொழுது, சாக்கு உடுத்திக் கொண்டேன், நோன்பிருந்து என்னை வருத்திக் கொண்டேன், முகம் குப்புற வீழ்ந்து மன்றாடினேன்" என்று தாவீது (திபா 35:13) கூறுகிறார். கடவுளின் விருப்பத்திற்கு மாறாக அரசர் தாவீது மக்கள் தொகையை கணக்கிட்டதால், இஸ்ரயேலர் பலரும் மாண்டனர். அப்போது தாவீதும் பெரியோரும் சாக்கு உடை உடுத்தி முகம் குப்புற விழுந்து கடவுளிடம் மன்னிப்பு வேண்டினர் (1குறி 21:16) என்று வாசிக்கின்றோம்.

இஸ்ரயேலர் தங்கள் பாவங்களால் ஒரு தீமை வந்ததாக உணர்ந்த தருணங்களில், சாக்கு உடையுடனும் சாம்பலுடனும் நோன்பிருந்து கடவுளின் இரக்கத்தை வேண்டி நின்றதை விவிலியம் பதிவு செய்கிறது. அசீரியப்

படையெடுப்பு குறித்து கேள்வியுற்ற அரசர் எசேக்கியா, தமது ஆடைகளைக் கிழித்துவிட்டு சாக்கு உடை உடுத்திக் கொண்டு ஆண்டவரின் இல்லத்தினுள் நுழைந்தார் (1 அர 19:1). இறைவாக்கினர் எலியாவின் கடந்துரையைக் கேட்ட அரசன் ஆகாபு, "தனது ஆடைகளைக் கிழித்துவிட்டு சாக்கு உடை உடுத்தி நோன்பிருந்து, ஆண்டவர்முன் பணிவோடு நடந்து கொண்டான்" (1 அர 21:27). சாம்பல் பூசுவது அல்லது சாம்பலில் அமர்வது மனத்துயரை வெளிப்படுத்தும் ஓர் அடையாளமாக இருந்ததை விவிலியத்தில் காண்கிறோம். சாம்பலில் அமர்ந்திருந்த யோபு (2:8), "சாக்கு உடையை நான் என் உடலுக்கு தைத்துக் கொண்டேன், புழுதியில் என் மேன்மையைப் புதைத்தேன்" (16:15) என்று புலம்பினார். யூதர்களை அழிப்பதற்கு ஆமான் அரசாணை பெற்றதை அறிந்த "மொர்தக்காய், தம் ஆடைகளைக் கிழித்து சாக்கு உடை அணிந்து, சாம்ல் பூசிக்கொண்டு, வெளியே நகரின் மையத்திற்கு சென்று ஓலமிட்டு மனங்கசிந்து அழுதார்" என்று எஸ்தர் நூலில் (4:1) இருந்து அறிகிறோம்.

மக்களின் பாவங்களுக்கு பரிகாரமாக, சாக்கு உடை அணிவதையும் சாம்பலில் அமர்வதையும் இறைவாக்கினர்கள் வலியுறுத்தினர் என்பதை விவிலியம் எடுத்துரைக்கிறது. "சாக்கு உடை உடுத்திக் கொள்ளுங்கள், அழுது புலம்புங்கள், ஏனெனில் ஆண்டவரின் கோபக்கனல் நம்மை விட்டு நீங்கவில்லை" என்று இறைவாக்கினர் எரேமியா (4:8) இஸ்ரயேல் மக்களிடம் அழைப்பு விடுத்தார். "நான் நோன்பிருந்து சாக்கு உடை அணிந்து சாம்பலில் அமர்ந்து என் தலைவராகிய கடவுளிடம் திரும்பி மன்றாடி வேண்டிக் கொண்டேன்" என்று இறைவாக்கினர் தானியேல் (9:3) யூதர்களின் மீட்புக்காக வேண்டியதைக் குறிப்பிடுகிறார்.

கடவுளின் மன்னிப்பை பெறும் நோக்கத்துடன் இஸ்ரயேலர் சாக்கு உடையையும் சாம்பலையும் பயன்படுத்தி வந்தனர். "சாக்கு உடை அணிந்து, புழுதியைத் தங்கள் மேல் பூசிக்கொண்டு நோன்பிருக்குமாறு மக்கள் ஒன்று கூட்டப்பட்டனர். இஸ்ரயேலர் எழுந்து நின்று தங்கள் பாவங்களையும் தங்கள் முன்னோரின் குற்றங்களையும் அறிக்கை செய்தனர்" என்று நெகேமியா நூல் (9:1, 2) கூறுகிறது. "குருக்களே, சாக்கு உடை உடுத்திக் கொண்டு தேம்பி அழுங்கள், என் கடவுளின் ஊழியர்களே, சாக்கு உடையை அணிந்து இரவைக் கழியுங்கள்" என்ற இறைவாக்கினர் யோவேலின் (1:13) அழைப்பும் இங்கு கவனிக்கத்தக்கது. இஸ்ரயேலர் மட்டுமன்றி, வேற்றின மக்களும் மனமாற்றத்தின் அடையாளமாக சாக்கு உடையையும் சாம்பலையும் பயன்படுத்தியதை விவிலியத்தில் இருந்து அறிய முடிகிறது. இறைவாக்கினர் யோனாவின் எச்சரிப்பைக் கேட்ட நினிவே நகர மக்கள் எல்லாரும் கடவுளின் செய்தியை நம்பி, நோன்பிருக்க முடிவு செய்தார்கள். பெரியோர், சிறியோர் அனைவரும் சாக்கு உடை உடுத்திக் கொண்டனர். இந்த செய்தி நினிவே அரசனுக்கு எட்டியது. அவன் தன் அரியணையை விட்டிறங்கி, அரச உடையைக் களைந்துவிட்டு, சாக்கு உடை உடுத்திக் கொண்டு சாம்பல்மீது உட்கார்ந்தான் (யோனா 3:6) என்று நாம் வாசிக்கிறோம். யூதர்கள் வேற்றினத்தாரின்கீழ் இருந்த பொழுதும் சாம்பலையும் சாக்கு உடையையும் பயன்படுத்தினர் என்பதை விவிலிய நூல்கள் காட்டுகின்றன. இன



அழிப்புக்கான அரசாணை வெளியிடப்பட்ட ஒவ்வொரு மாநிலத்திலும் யூதர்கள் பெரிதும் துயருற்று அழுது புலம்பிக் கொண்டார்கள் (எஸ் 4:3) அந்தியோக்கு மன்னனின் கட்டளைப்படி தங்களை அழித்தொழிக்க ஆளுநர் லீசியா ஆளனுப்பிய வேளையில், "இஸ்ரயேலர் நோன்பிருந்து சாக்கு உடை உடுத்தி தலை மீது சாம்பலைத் தூவி, தங்கள் ஆடைகளைக் கிழித்துக்கொண்டார்கள்." (1 மக் 3:47).

சாக்கு உடையும் சாம்பலும் மனமாற்றத்தின் வெளிப்புற அடையாளங்கள் மட்டுமே. ஆனால் உண்மை மனமாற்றம் நிகழாத பொழுது இந்த அடையாளங்கள் பொருளற்றவையாக மாறிவிடும். எனவேதான், "ஒருவர் நாணலைப் போல் தன் தலையைத் தாழ்த்தி சாக்கு உடையையும் சாம்பலையும் அணிந்து கொள்வதா எனக்கேற்ற நோன்பு?" என்று இறைவாக்கினர் எசாயா (58:5) வழியே ஆண்டவர் கேள்வி எழுப்புகின்றார். "நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம் இதயத்தைக் கிழித்துக்கொண்டு கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" என்று இறைவாக்கினர் யோவேல் (2:13) அழைக்கின்றார். "கொராசின் நகரே, பெத்சய்தா நகரே, ஐயோ உங்களுக்கு கேடு ஏனெனில் உங்கள் நடுவே செய்யப்பட்ட வல்ல செயல்கள் தீர், சீதோன் நகரங்களில் நிகழ்ந்திருந்தால், அந்த மக்கள் முன்பே சாக்கு உடை உடுத்தி சாம்பல் பூசி மனம் மாறியிருப்பர்" (மத் 11:21) என்று கண்டிக்கும் இயேசு மனமாற்றத்தை வலியுறுத்துகிறார். "எவர் ஒருவர் பாவ வழியிலிருந்து மனம் மாறுகிறாரோ அவர் வாழ்வு அடைவார். எவர் ஒருவர் தம் தூய வாழ்விலிருந்து விலகி பாவ வாழ்வை நாடுகிறாரோ அவர் சாவர்" என்ற இறைவாக்கினர் எசேக்கியேலின் (18:21-29) வார்த்தைகளை மனதில் இருத்தி, தீமைகளை விலக்கி தூயோராய் வாழ்வோம்.



# சிலுவைப் பாதை
## சமூகமாய் ஒரு பயணம்

*முனைவர் தே. ஜான்*

**முன்னுரை :**

**முதல்வர்:** தந்தை, மகன், தூய அவியாரின் பெயராலே ஆமென்.

**எல்லோரும்:** இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, உம்திருமகன் இயேசுவின் பாடுகளையும் இறப்பையும்நாங்கள் நினைவுக்கூர்கின்றோம். அவர் நடந்துச்சென்ற சிலுவைப் பாதையில் அவரைப் பின்சென்று நடந்திட நாங்கள் வந்துள்ளோம். இறுதிவரை இயேசுவின் உண்மையான சீடராக நாங்கள் வாழ வரமருள வேண்டுமென்றும், எங்களுக்காகவும், உத்தரிப்புநிலை ஆன்மாக்களுக்காகவும் சிலுவைப் பாதையை தியானிப்பவர்களுக்கு அளிக்கப்படும் பலன்களை அடையவிரும்பி உம் இரக்கத்தைக் கெஞ்சி மன்றாடுகிறோம். புனித மரியே, வியாகுல அன்னையே, இயேசுவின் பாடுகளின்போது அவரோடு நீர் உடனிருந்து, அவருடைய பாடுகளில் பங்கேற்றதுபோல நாங்களும் எங்கள் அயலார் அனுபவிக்கும் துன்பங்களில் அவர்களுடனிருந்து துணைபுரியும் ஆற்றலைப் பெற்றுக்கொள்ள உம் திருமகனிடம் எங்களுக்காகப் பரிந்து பேசிப் பெற்றுத்தந்தருள வேண்டுமென்றும், உமது பாடுகளின் பாதையில் நடக்க இருக்கும் எங்களுக்கு எவ்வித தொந்தரவும், அசம்பாவிதகங்களும் நிகழாமல் பக்தியோடு இப்பயணத்தில் பங்குபெற நீர் எங்களை அசீர்வதிக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

பாடல்: பழிகளை சுமத்தி பரிகசித்தார் - உயிர்
பறித்திட எண்ணித் தீர்ப்பளித்தார் - எனக்காக இறைவா



முதல் நிலை :

## இயேசுவை சிலுவை மரணத்திற்குத் தீர்ப்பிடுகின்றனர்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.


நாட்டில் நீதி மன்றங்கள் செயல்படுவது நீதியை நிலை நாட்டவே என்பதை நாமறிவோம். அங்கு நடைபெறும் சர்ச்சைகள் தண்டனையிலிருந்து விடுபடவும், குற்றமற்றவனுக்கு அநீதி ஏற்படாதிருக்கவும் என்பது யாவரும் அறிந்த உண்மையே ஆகும். ஆனால் இயேசுவோ மாசற்றவர் என்று அனைவரும் அறிந்திருந்தும் அவர்மீது பொய்க் குற்றங்களைச் சுமத்தி அன்றைய நாளில் அவமானமாகக் கருதப்பட்ட சிலுவைச் சாவைத் தண்டனையாகப் பெறச் செய்தனர். இன்றும் இதுபோன்று குற்றமற்றவர்கள் தண்டிக்கப்படுவதையும், உண்மை குற்றவாளிகள் தண்டனைக்குத் தப்பித்துக் கொள்வதையும் நாம் காண்கிறோம். ஆகவே உண்மைக்குப் புறம்பானவற்றைப் பிறர்மீது நாம் சுமத்தாமலும், பிறர் பெயரைக் கெடுக்காமலும், குடும்பங்களில் பிரச்சனையின்றி ஒன்றுமையோடு செயல்படும் ஆற்றலை இறைவன் நமக்கருள மன்றாடுவோம்.

செபம் : நீதி தேவனாகிய இயேசுவே! உண்மைக்காகவும், நீதிக்காகவும் எங்கள் உயிரையே தியாகம் செய்ய நேர்ந்தாலும் துணிவோடு நாங்கள் செயல்பட எமக்கருள்புரிய உம்மை வேண்டுகின்றோம்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

---

பாடல்: தாளாச் சிலுவை சுமக்க வைத்தார் - உம்மை
மாளாத் துயரால் துடிக்க வைத்தார் -எனக்காக இறைவா



இரண்டாம் நிலை :

## இயேசுவின் தோளில் சிலுவையைச் சுமத்துகிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

செல்வந்தர்களும், அரசியல் செல்வாக்குள்ள தலைவர்களும் தங்களின் சுயநலத்தினால் பணப் பற்றாக்குறையையும், வரிச்சுமையையும் ஏழைகள்மீதும், நடுத்தர மக்கள்மீதும் அவர்கள் சுமத்தி வருகிறார்கள். அதனால் அவர்கள் அல்லலுற்று, மீளமுடியாத வறுமையால் வாடுவதை நாம் அன்றாடம் காணுகின்றோம். இதைக் குறித்து கடவுள், "மறைநூல் அறிஞரும், பரிசேயரும் பளுவான சுமையைக்கட்டி மக்களுடைய தோள்மேல் வைக்கிறார்கள். தாங்களோ அதை ஒரு விரலாலும் அசைக்க மாட்டார்கள்" என்று எடுத்துக்கூறி அவர்களுக்கு ஐயோ கேடு என்று எச்சரிக்கிறார். ஆம், நாமும் நம்முடைய சுயநலத்தால் பிறர்மீது நம்முடைய சுமைகளை சுமத்தி அதில் சந்தோஷமடைகின்றோம். இந்த தவறுதலுக்காக நாம் இறைவனிடம் மன்னிப்பை வேண்டுவோம்.

செபம் : ஒடுக்கப்பட்டவர்களுக்கு உரிமை வாழ்வு அளிக்க வந்த இயேசுவே! நாங்கள் ஏழை எளியவரின் வயிற்றிலடிக்காமல், உழைப்பவனுக்கு உரிய ஊதியம் வழங்கி, அவனும் மனிதன் என்பதை உணர்ந்து மனித நேயத்தோடு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகின்றோம்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

---

பாடல்: விழுந்தீர் சிலுவைப் பளுவோடு - மீண்டும்
எழுந்தீர் துயர்களின் நினைவோடு -எனக்காக இறைவா



மூன்றாம் நிலை :

## இயேசு சிலுவைச் சுமை தாழாமல் முதன்முறை தரையில் விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

வறுமையின் கொடுமையாலும், தகுந்த ஊதியம் இல்லாமலும், விலைவாசி ஏற்றத்தாழ்வாலும் அரசுகளின் வரிச்சுமையாலும் ஏழை எளிய மக்கள் வாழ இயலாமல் கீழே வீழ்ந்து கிடக்கின்றனர். அவர்கள் நிலை கண்டு மனம் இரங்கி அவர்களுக்கு உதவிட தன்னலம் கருதி வாழும் நமக்கு மனமில்லை. ஊர் மெச்ச மேடையில் முழங்குகிறோம். வீழ்ந்து கிடக்கும் நமது உடன் பிறப்புக்களை கை தூக்கி விட நல்ல மனதைத் தரும்படியாக இறைவனை வேண்டுவோம்.

செபம் : பரிவோடு ஆதரவற்றோரை அரவணைக்கும் இறைவா! அழும் குழந்தையின் நிலையை அறிந்து பாலூட்டும் தாயைப்போன்று, நாங்கள் தன்னலம் நீக்கி, ஆதரவற்றோருக்கு உதவிடவும் அவர்கள் துயர்துடைக்கும் மேலான எண்ணத்தை எமக்களிக்க உம்மை மன்றாடுகின்றோம்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

பாடல்: தாங்கிட வொண்ணாத் துயருற்றே - உம்மைத்
தாங்கிய அன்னை துயருற்றாள் -எனக்காக இறைவா



நான்காம் நிலை :

## இயேசு தன் அன்புத் தாயைச் சந்திக்கிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இயேசுவைக் கருவறையில் கருத்தரித்த நாளிலிருந்து இந்நாள்வரை தன் மகனும், கன்னிமரியாவும் எத்துனை இடர்பாடுகளை சந்தித்திருப்பாரென்று சற்று சிந்தித்துப் பார்ப்போம். ஏழ்மை நிலையிலும் தன் அன்பு மகனைத் தகுந்த முறையில் வளர்த்து ஆளாக்கி உலகிற்கு அர்ப்பணித்த அந்தத் தியாக உள்ளம் மேலானது என்பதில் எள்ளளவும் அய்யமில்லை. அத்தகைய தாய் தன்மகன் சிலுவை சுமந்து செல்லும் பொழுது சந்தித்த இயேசுவின் மனநிலையும் தாயின் மனநிலையும் எத்தகையது என்பதை எண்ணுகின்ற நாமும் நமது தாயை எவ்வாறு பேணிக்காக்க வேண்டுமென்று சிந்தித்து நமது வாழ்விலும் பெற்றவளை முதுமையிலும் அன்பு செய்து வாழ இறைவன் நமக்கு அருள்புரியும்படி வேண்டிக் கொள்வோம்.

செபம் : இவ்வுலக வாழ்வின் இறுதிவரை தன் தாயை அன்பு செய்துவந்த இயேசுவே! நாங்களும் எங்களை அன்பு செய்பவவை அன்பு செய்யவும், அக்கம் பக்கத்திலுள்ளோரோடு சகோதர உணர்வோடு வாழும் பரந்த உள்ளத்தை நாங்கள் பெற்றுக்கொள்ள அருள்தாரும்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

பாடல்: மறுத்திட முடியா நிலையாலே - சீமோன்
வருத்தினார் தன்னை உம்மோடு -எனக்காக இறைவா

ஐந்தாம் நிலை :

## சீமோன் என்பவர் இயேசு சிலுவை சுமந்து செல்ல உதவுகிறார்



முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

"உடுக்கை இழந்தவன் கைபோல் ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்று உண்மையான நட்புக்கு இலக்கணம் வகுத்தவன் தமிழன். ஒருவருக்கு இடர்ப்பாடு வரும்பொழுது பிறருடைய தூண்டுதல் இல்லாமல் தாமாகவே முன்வந்து உதவுவதே மேலான செயலாகும். இங்கு சீமோன் இயேசுவுக்கு உதவி செய்தார் என்று நாமறிவோம். ஆகவே அவரைப் போலன்றி நாம் தாமாகவே முன்வந்து பிறரது துன்பத்தைத் துடைத்து உதவ பெருந்தன்மையான உள்ளத்தை நமக்கு இறைவன் அருள மன்றாடுவோம்.

செபம் : எவ்வித நிபந்தனையுமின்றி எதிர்பாராமல் எமக்கு அன்றாடம் உதவி செய்பவரே, எங்களின் தேவைகளை அறிந்து நீர் செயல்படுவதுபோல நாங்களும் பிறரின் தேவை என்னவென்பதை அறிந்து அவர்களுக்கு செய்யவும், உம் அடிச்சுவட்டை பின்பற்றி வாழ உதவி செய்யும்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

---

பாடல்: நிலையாய் பதிந்தது உம் வதனம் - அன்பின்
விலையாய் மாதின் சிறு துணியில் -எனக்காக இறைவா



ஆறாம் நிலை :

## வெரோணிக்கா என்ற பெண் இயேசுவின் முகத்தைத் துடைக்கிறாள்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

சில நேரங்களில், பிறருக்கு உதவி செய்ய பலவேளைகளில் துணிச்சல் தேவைப்படுகிறது. ஓர் ஏழைக்கு உதவி செய்ய நமக்கு மனமிருந்தாலும், நம்மைப்பற்றி பிறர் தவறாக கருதுவார்களோ என்ற எண்ணத்தில் உதவி செய்யாது தட்டி கழித்து விடுகிறோம். நல்ல சமாரியன் உவமைக் கதையில் இயேசு கூறுவது போல குற்றுயிராய் கிடந்த யூதனுக்கு உதவிட குருவும், கோயில் பணியாளனும் முன்வராமல், கண்டும் காணாததுபோலச் சென்று விடுகின்றனர். யூதர்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட சமாரியன் உயிருக்காக போராடிக் கொண்டிருப்பவன் யூதனென்று அறிந்தும், அவன்மீது மனமிரங்கி தன் பயணம் தடைப்பட்டாலும், உதவிசெய்து அவனை காப்பாற்றுகிறான். இத்தகைய துணிச்சலும், மனிதாபிமானமும் கொண்ட நல்ல மனதை நாம் பெற்றுக்கொள்ள இறைவனை வேண்டுவோம்.

செபம் : யூத தலைமைக் குருக்களுக்கும் அறிஞர்களுக்கும் அஞ்சாமல் வறியவருக்கும், அடிமைப்பட்டோருக்கும் மறுவாழ்வு அளிக்க வந்த இயேசுவே! எவ்வித சூழ்நிலையிலும் மனத்துணிவோடு பிறருக்கு நல்லவற்றை செய்ய நல்ல உள்ளத்தை அருளும்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

பாடல்: ஓய்ந்தீர் பளுவினைச் சுமந்ததனால் - அந்தோ
சாய்ந்தீர் நிலத்தில் மறுமுறையும் -எனக்காக இறைவா



ஏழாம் நிலை :

## இயேசு இரண்டாம்முறை தரையில் விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

வறுமையிலும், வேலையில்லாத் திண்டாட்டத்திலும் தினமும் அல்லல்பட்டு பசிப் பிணியால் சோர்ந்து விழும் மக்களுக்கு நாம் என்ன உதவி செய்கிறோம்? பையிலுள்ள 5 அல்லது 10 காசை வீசி எறிந்துவிட்டு நமது கடமை முடிந்ததாக எண்ணிச் செல்லுகிறோம். ஒரு நாளைக்கு நான்கு வேளை உண்கிறோம். ஒருவேளை உணவு கிடைக்கவில்லையாயின் சினங்கொள்கிறோம். அளவுக்கு அதிகமாகவே உண்ணுகிறோம். உணவை வெளியில் கொட்டுகிறோம். அண்டை வீட்டான் ஒருவேளை உணவுக்கூட நிறைவாக உண்ண உணவின்றித் தவிப்பதை நாம் எண்ணிப் பார்ப்பதில்லை. சில வேளைகளில் அது அவன் தலைவிதி, கடவுள் சாபம் என்று கூறிச்செல்கிறோம். அத்தகைய இரக்கமற்ற செயலுக்காக மனம் வருந்தி ஆண்டவனிடமும் அயலானிடமும் மன்னிப்பு கேட்போம்.

செபம் : வருந்திச் சுமை சுமப்பவரை தன்னிடம் அழைத்து அவர்களுக்கு ஆறுதலளிக்கும் இறைவா! எங்கள் அயலானின் பசிப் பிணியைப் போக்க எங்களால் முடிந்தளவு அவர்களின் பசியைப்போக்கும் தாராள உள்ளத்தை எங்களுக்குத்தாரும்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

பாடல்: விழிநீர் பெருக்கிய மகளிருக்கு - அன்பு
மொழிநீர் நல்கி வழி தொடர்ந்தீர் -எனக்காக இறைவா



எட்டாம் நிலை :

## எருசலேம் மகளிருக்கு இயேசு ஆறுதல் கூறுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

நம்மைச் சுற்றியுள்ளோர் உயிர் இழப்பினாலோ, பொருள் இழப்பினாலோ அல்லது வேறு சில துன்பங்களாலோ அழுது துடிக்கும் பொழுது நாம் அவர்கள் துன்பங்களில் பங்குகொண்டு ஆறுதல் வழங்குகிறோமா? அல்லது ஏளனம் செய்கிறோமா? அல்லது கண்டும் காணாமலும் அலட்சியமாய் இருக்கிறோமா? சற்று சிந்தித்துப் பார்ப்போம். சாதிமத இன வேறுபாடின்றி உதவி செய்கிறோமா? அல்லது கிறித்தவர்களுக்குத்தான் உதவி செய்வோமென்று சொல்லி, எல்லா மக்களும் இறைவனின் பிள்ளைகள் என்ற பரந்த எண்ணத்தை மூடி மறைக்கிறோமா? அவ்வாறு மனிதத் தன்மையையிழந்து செயல்பட்டிருந்தால் அதற்காக வருந்தி இறைவனின் மன்னிப்பைக் கேட்போம்.

செபம் : பிறரது துன்பங்கண்டு மனமுருகிய இயேசுவே! நாங்கள் பிறரது துன்ப வேளையில் அவர்களுக்கு ஆறுதல் அளித்து உதவிட நல்ல மனதைத் தாரும்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

---

பாடல்: மூன்றாம் முறையாய் நீர் விழுந்தீர் - கால்
ஊன்றி நடந்திடும் நிலை தளர்ந்தீர் -எனக்காக இறைவா



ஒன்பதாம் நிலை :

## இயேசு மூன்றாம் முறை தரையில் விழுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

நாமெல்லோரும் மீண்டும் மீண்டும் தவறுகள் செய்து மன மாற்றமடையாமல் கடின இதயத்தோடு வாழ்ந்து வருகிறோமா? சற்று சிந்தித்துப் பார்ப்போம். மீண்டும் மீண்டும் தவறிழைப்பது மனித இயல்புதானே என்று நமக்குள் சமாதானம் கூறிக்கொள்கிறோமா? மனமாற்றம் இல்லை என்றால் வாழ்வில் முன்னேற்றமில்லை. இயேசு உடல் பலவீனத்தால் பலமுறை தரையில் வீழ்ந்தாலும் மீண்டும் எழுந்து தனது இலக்கை நோக்கி துன்பப்பயணத்தை மேற்கொண்டாரல்லவா? அத்தகைய உள்ள வலிமையை இறைவன் நமக்கருள வேண்டிக்கொள்வோம்.

செபம் : வலுவற்றவருக்கு வாழ்வளிக்கும் வள்ளலாகிய இறைவா! நாங்கள் மீண்டும் மீண்டும் மனமாற்றம் பெறவும், தவறுகள் செய்யாது உதவியால் திட உள்ளங்கொண்டு வாழவும் வரமருளும்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

---

பாடல்: உடைகள் களைந்திட உம்மைத் தந்தீர் - இரத்த
மடைகள் திறந்திட மெய் நொந்தீர் -எனக்காக இறைவா



பத்தாம் நிலை :

## இயேசுவின் உடைகளைப் பறிக்கிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

மானத்தைக் காக்க மனிதனுக்கு ஆடைகள் தேவை. "ஆடையில்லா மனிதன் அரை மனிதன்" சுயநினைவின்றி உடைகளைப் இழந்த பைத்தியக்காரனே புறக்கணிப்பான். எனினும் பெண்களில் சிலர் ஆடை குறைப்பால் அடக்கமற்ற நிலையில் இளைஞர்களின் உள்ளங்களைக் கெடுக்கும் அவலநிலை, இன்று எங்கும் காணப்படுவதொன்றாகும். ஆடம்பர உடையை என்றும் நாடுவோர் தெரு ஓரமாக ஆடையின்றி அல்லது கந்தை துணியோடு கிடக்கும் ஏழை மக்களைச் சுரண்டி வாழ்பவர்களாவர். அவர்களுக்குச் சேரவேண்டிய உடமைகளைப் பறித்து அத்தகைய இழி நிலையான வாழ்வு நமக்குத் தேவையில்லை என்பதை உணர மேற்கொள்கின்றனர். இறைவனை வேண்டுவோம்.

செபம் : வலுவற்றவருக்கு வாழ்வளிக்கும் வள்ளலாகிய இறைவா! நாங்கள் மீண்டும் மீண்டும் மனமாற்றம் பெறவும், தவறுகள் செய்யாது உதவியால் திட உள்ளங்கொண்டு வாழவும் வரமருளும்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

பாடல்: பொங்கிய உதரம் வடிந்திடவே - உம்மைத்
தொங்கிடச் செய்தார் சிலுவையிலே -எனக்காக இறைவா



பதினொன்றாம் நிலை :

## இயேசுவை சிலுவையில் மூன்றாணியால் அறைகிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

நாம் நமது அயலான், உடன் பணியாற்றுபவர் இவர்களை பொறாமை என்ற கயிற்றால் கட்டிப்போட்டு வாழ்க்கையில் அவர்கள் முன்னேறவிடாது தடுத்துவிடுகிறோம், உயர்வைக் கண்டு அழுக்காறு கொள்ளுகிறோம். நமது பேனா முனையால் பிறருக்கு அநியாயமாய் தீர்ப்பிடுகிறோம். அவர்கள் பெயர் கெட்டுபோகக் காரணமாய் இருக்கிறோம். இது கொலை செயலலைவிட தீங்கானது. பிறருடைய முன்னேற்றத்திற்கு இடையூராய் இருக்கும் கொடுமையை நாம் விலக்கி வாழ இறைவனின் அருளை வேண்டுவோம்.

செபம் : மூன்றாணிகளால் சிலுவையில் முடக்கப்பட்ட இயேசுவே! பிறருடைய பெருமை, கீர்த்தி இவற்றைக் கண்டு நாங்கள் மகிழ்ச்சியடையாமல் இருக்கும் இழிநிலையை மாற்றி, அவர்கள் முன்னேற்றத்திற்கு உதவிடும் நல்ல பண்பை எமக்குத் தாரும்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

பாடல்: இன்னுயிர் அகன்றது உமை விட்டு - பூமி
இருளில் ஆழ்ந்தது ஒளி கெட்டு -எனக்காக இறைவா



பன்னிரெண்டாம் நிலை :

## இயேசு சிலுவை மரத்தில் உயிர் விடுகிறார்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

கோழை பலமுறை சாகிறான். ஆனால் வீரனுக்கு சாவு ஒருமுறை தான் வரும் என்பது பழமொழி. அதுபோல இயேசு சாவுக்கு அஞ்சாதவராய் தேடியவர்களிடம் தன்னையே அவரைக் கொல்லத் கையளிக்கிறார். சிலுவையில் உயிர்விடும் முன்னர் தன் சாவுக்குக் காரணமான அனைவரையும் மன்னிக்கும்படி தந்தையாகிய இறைவனை வேண்டுகிறார். தன்னைப் பெற்று வளர்த்து ஆளாக்கிய தாயை அனாதையாக உலகில் விட்டுச் செல்லாமல் தன்னால் மிகுதியாக அன்பு பாராட்டப்பட்ட சீடன், யோவானிடம் ஒப்படைத்துக் கண்காணிக்கும்படி செய்கிறார். தன்னோடு சமமாக சிலுவைச் சாவுக்குத் தீர்ப்பிடப்பட்ட கள்வர் இருவரில் தனது குற்றங்குறைகளை எண்ணி வருந்தியவனுக்கு அழியா வாழ்வுக்குப் பரிந்துரை செய்கிறார். தனக்குக் கொடுக்கப்பட்ட மீட்புப் பணியை நிறைவேற்றியதாக நிறைவுகொண்டு உயிர் விடுகிறார். நாமும் நமது உயிர் பிரியும் வேளையில் மகிழ்ச்சியான உள்ளத்தோடு நிறைவு பெற்று சாவுக்கு அஞ்சாமல் வாழ்வை மனமகிழ்வோடு வான்வீடு செல்லும் அருளைக் பெறுவோமா?

செபம் : வீரச்சாவை மேற்கொண்ட இயேசு பெருமானே! இவ்வுலகில் சாவு என்பது வாழ்வின் முடிவல்ல. நிலையான பேரின்ப பெருவாழ்வின் தொடக்க நிலை என்ற பெருமித எண்ணத்தோடு நாங்கள் உயிர்விட வரம் தாரும்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

பாடல்: துயருற்றுத் துடித்தாள் உளம் நொந்து - அன்னை
உயிரற்ற உடலின் மடிசுமந்து -எனக்காக இறைவா



பதிமூன்றாம் நிலை :

## இயேசுவின் திருஉடலை அவர் தாயார் மடியில் வைக்கிறார்கள்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

இயேசுவின் தாய் மரியா எத்துணை மனவலிமை உடையவளாய் இருந்திருக்க வேண்டும். முப்பது ஆண்டுகள் வளர்த்து உலக மக்களின் மீட்புக்காகத் தனது ஏக மகனை அர்ப்பணித்த அத்தாய் அந்த மக்களே கொலையும் செய்து இறந்த உடலை அவள் மடியில் வைத்தார்கள் என்று எண்ணும்போது நமது உள்ளம் உருகுகின்றதல்லவா? குழந்தையாக இயேசு அவள் மடியில் தவழும்பொழுது எத்ததைய மகிழ்ச்சியடைந்திருப்பாள். பன்னிரெண்டு வயதில் மகனைக் காணாது துடித்தபோது அவள் உள்ளம் எத்துணை வேதனை அடைந்திருக்கும். மக்களுக்கெல்லாம் அவர் நன்மை செய்துகொண்டு வருகிறார் என்று அறிந்தபோது மீண்டும் மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்திருப்பாள். அத்தகைய மகனை இழந்து அவல நிலையில் அமர்ந்திருக்கும் தாயின் உள்ளத்தை சற்று சிந்திப்போம். இன்பமும் துன்பமும் மாறி மாறி வரும் இவ்வுலகைக்கண்டு அஞ்சாமல் உள்ளத்தை தேற்றிக்கொண்டு இறந்த உடலைத் தன் மடியில் தாங்கிக் கொண்டு இருந்திருப்பாறென்பதே உண்மை. அத்தகைய உள்ளமே நமக்கு நம் வாழ்வில் நம்பிக்கையூட்டும். ஆகவே அத்தகைய வலிமைவாய்ந்த உள்ளத்தை நாம் பெற இறைவனிடம் அத்தாய் வேண்டிப் பெற்றுத்தருவாளாக.

செபம் : தியாகத்தின் சிகரமாய் விளங்கும் தேவ அன்னையே! எங்களுக்கும், எங்கள் மக்களுக்கும் எங்கள் நாட்டின் நலனுக்கும் எங்களை அர்ப்பணித்து வாழ இறைவன் வரமருள எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

- எங்கள்மேல் தயவாயிரும் சுவாமி தயவாயிரும்
- மரித்த நம்பிக்கையாளர்களின் ஆன்மாக்கள் இறைவனின் இரக்கத்தினால் நித்திய சமாதானத்தில் இளைப்பாற்றியை அடைவார்களாக. ஆமென்.

---

பாடல்: ஒடுங்கிய உமதுடல் பொதியப்பட்டு - நீர்
அடங்கிய கல்லறை உமதன்று -எனக்காக இறவைா



பதினான்காம் நிலை :

## இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கின்றனர்

முதல்வர்: திவ்விய இயேசுவே உம்மை ஆராதித்து வணங்கி உமக்கு நன்றியறிந்த தோத்திரம் செய்கின்றோம்.
அனைவரும்: அதேனென்றால் உமது பாரமான திருச்சிலுவையால் உலகத்தை மீட்டு இரட்சித்தீர்.

சூசை பிலாத்துவிடம் ஆணைபெற்று, அரிமத்தியாவூர் என்பார் இயேசுவின் திருவுடலை சிலுவையினின்று இறக்கி, நல்ல மணம் தரும் பொருட்களோடு மரபுப்படி புதுக்கல்லறை ஒன்றில் அடக்கம் செய்தார். நம்முடைய அன்றாட வாழ்வில் நாம் தினமும் அனாதையாக விடப்பட்டவர்களின் இறந்த உடலைக் காண்கிறோம். கண்டும் காணாததுபோல் போய்விடுகிறோம். நம்மால் இயலாவிடினும், நகர சபை அதிகாரிகளிடம் தெரிவித்து அவ்வுடலை அடக்கம் செய்யலாம். பணமில்லாமல் அடக்கம் செய்யத் தவித்துக் கொண்டிருக்கும் ஏழைக் குடும்பங்களுக்கு உதவி பணம் செலவிட செய்யலாம். இத்தகைய சிறந்த பணியை இதுவரை செய்யத் முயற்சிப்போம். தவறினாலும் இனியாவது பட்டினிச்சாவைக் செய்ய கண்டு பரிதாபப்படுவதோடு அமையாமல், பட்டினிச் சாவை எதிர்நோக்கி இருப்போருக்கு இரங்கி மனிதாபிமானத்தோடு நம்மால் இயன்ற உதவி அனைத்தையும் செய்ய முன் வருவோம்.

**செபம் :** அன்பான இறைவா! பிறருடைய மகிழ்ச்சியில் பங்குபெற விழையும் நாங்கள் பிறருடைய இடர்பாட்டிலும் வறுமையிலும் பங்கு பெற்று அவர்களுக்கு ஆறுதலளிப்பது போல அவர்கள் துன்பத்தையும் துடைக்க மேலான உள்ளத்தைத் தாரும்.

**முடிவுரை :** வாழ்வும், வழியும், உயிருமானவர் நானே என்றவரே, வாழ்வின் பாதையில் உண்மை வாழ்வு என்பது என்ன என்று சொல்லித்தர உலகுக்கு வந்தவரே, அந்த வாழ்வின் பாதைகளை தெளிவுறக் கற்றுக்கொடுக்க நீரே உம்மைத் தாழ்த்தி மனித அவதாரம் ஏற்று வந்தவரே, வாழ்வின் பாதைகளில் கொடுப்பதற்கென்றே பல உண்டு என்று சொல்லிக் கொடுக்கப் பாடுகளையும் ஏற்றீரே. உம்மிடம் கற்றுக்கொள்ள பல நல்ல வழிகளை எமக்கு வாழ்வின் வழியைக் கற்றுக்கொடுத்தீரே, உம் வாழ்விற்கு செவி கொடுக்கின்றோம். எம் வாழ்வை மாற்றும் என்று மன்றாடுகிறோம். கொடுப்பதில்தான் எங்களது பேறுடைமை உண்டு என எங்களுக்குக் கற்றுக்கொடுத்தவரே, கொடுக்கங்கள் அமுக்கி, குலுக்கி, சரிந்துவிழும்படி கொடுகங்கள். நீங்கள் எந்த அளவையால் அளப்பீர்களோ, அதே அளவையால் நானும் அளப்பேன் என்று சொன்னவரே, எங்கள் வாழ்விலும் அளவுக்கு அதிகமாக உள்ளவற்றை மற்றவர்களுக்கு தாராளமாக மகிழ்வோடு கொடுக்க வரமருளும். இச்சிலுவைப் பாதையில் கேட்டவை, தியானித்தவைகளை எங்கள் வாழ்வில் கடைப்பிடித்து வாழ உம் தூய ஆவியாரின் அருட்கொடைகளை எங்களுக்கு நிறைவாக பொழிந்தருள வரமருளும். ஆமென்.





# திருஅவைச் செய்திகள்

*திரு. சாண்டோ*

## புனித பூமி மக்கள் சம உரிமைகள் பெறவேண்டும்

புனித பூமி ஒருங்கிணைப்புக் குழுவைச் (HLC) சார்ந்த கத்தோலிக்க ஆயர்கள் இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீனிய பகுதிகளில் மனித மாண்பு, உரையாடல் மற்றும் அமைதியை நிலைநாட்ட அழைப்புவிடுத்துள்ளனர்.காசா மற்றும் ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையோர பகுதிகளில் தொடரும் வன்முறையின் காரணமாக துன்புறும் மக்களுடன் தோழமையை வெளிப்படுத்த வேண்டும் என ஆயர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். குறிப்பாக, பெடோயின் மற்றும் கிறிஸ்தவச் சமூகத்தினரிடையே, கட்டுப்படுத்தப்பட்ட நடமாட்டம், குடியேற்ற வன்முறை, நிலம் பறிமுதல் மற்றும் மனிதாபிமான நெருக்கடி குறித்த தகவல்களைத் தாங்கள் கேட்டறிந்ததாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.புனித பூமி ஒருங்கிணைப்புக் குழுவைச் சார்ந்த ஆயர்கள் இஸ்ரேல் நாடு அமைதியும் பாதுகாப்பும் நிறைந்த நிலையில் இருப்பதற்கான உரிமையை மீண்டும் நிலைநாட்ட வேண்டும் என உறுதியாக கூறியதோடு, இப்பகுதியில் உள்ள அனைத்து மக்களுக்கும் சம உரிமைகள் கிடைக்கப் பெறவும், வன்முறை, பயங்கரவாதத்திற்கு முடிவு, மற்றும் இரு-நாடுகளுக்கு இடையேயான தீர்வுக்கான புதுப்பிக்கப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் கோரியுள்ளனர்மேலும் ஆயர்கள் இவ்விரு அரசுகளும் அனைத்துலகச் சட்டத்தை நிலைநிறுத்துமாறு வலியுறுத்தியுள்ளதுடன், இஸ்ரேலிய மற்றும் பாலஸ்தீனிய பகுதிகளில் நீதி, உரையாடல் மற்றும் நல்லிணக்கத்திற்காகத் தொடர்ந்து ஆதரவுக் குரல் கொடுப்பவர்களுக்கும் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்துள்ளனர்.

## உலகளாவிய அமைதிக்கு கத்தோலிக்கத் தலைவர்கள் அழைப்பு

அணு ஆயுதங்கள் இல்லாத உலகத்திற்கான கூட்டாண்மை நடைமுறைக்கு வந்த ஐந்தாம் ஆண்டைக் குறிக்கும் வகையில், உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்கத் தலைவர்கள் ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க கூட்டறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளனர். "2017-ஆம் ஆண்டில் இந்த ஒப்பந்தத்தில் முதன்முதலாகக் கையெழுத்திட்ட திருப்பீடம், அணு ஆயுத ஒழிப்பிற்கான தனது அசைக்க முடியாத உறுதிப்பாட்டை மீண்டும் வலியுறுத்தியுள்ளது" என்றும் இந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது. அணு ஆயுத வல்லரசு நாடுகள், அணு ஆயுதப் பரவல் தடுப்பு ஒப்பந்தத்தின் கீழ் அர்த்தமுள்ள பேச்சுவார்த்தைகளை நடத்தத் தவறிவிட்டன என்று அணு ஆயுதங்கள் இல்லாத உலகத்திற்கான கூட்டாண்மை (TPNW) கடுமையாக விமர்சித்துள்ளது. குறிப்பாக, உக்ரைனில் இரஷ்யாவின் நடவடிக்கைகள் மற்றும் மத்திய கிழக்கில் நிலவும் மோதல்கள் போன்ற உலகளாவியப் பதட்டங்களுக்கு மத்தியில், இந்த நாடுகளின் மெத்தனப் போக்கு கவலையளிப்பதாக அது சுட்டிக்காட்டியுள்ளது. "எண்பது ஆண்டுகளாக நீடிக்கும் அணு ஆயுத அச்சுறுத்தல்கள் மிகவும் நீண்ட காலம்" என்றும் "இது இனியும் தொடரக்கூடாது" என்றும் கூறும் அதன் அறிக்கை, "அணு ஆயுதத் தடை ஒப்பந்தமானது நாடுகள் மற்றும் எல்லைகளைக் கடந்த ஒரு மிக உயர்ந்த தார்மீக செல்வாக்கைக் கொண்டிருக்கிறது" என்றும் வலியுறுத்தியுள்ளது. அமெரிக்க மற்றும் ஜப்பானிய பேராயர்களான மேதகு ஜான் சி. வெஸ்டர் மற்றும் மேதகு ஜோசப் மிட்சுவாக்கி தகாமி ஆகியோர், ஜப்பானில் அணு குண்டு வீச்சினால் ஏற்பட்ட பேரழிவுகளை நினைவு கூர்ந்ததோடு, அணு ஆயுதங்களை முற்றிலுமாக ஒழிக்க வேண்டும் என்ற கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தினர்.

## ஆயுதங்களற்ற அமைதிக்குத் திருப்பீடம் அழைப்பு

ஆயுதங்களற்ற மற்றும் ஆயுதங்களைக் களைந்த அமைதிக்கான திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களின் அழைப்பை திருப்பீட மற்றும் தூதரக அதிகாரிகள் தங்கள் உரைகளில் எடுத்துக்காட்டினர்.ஜெனீவாவில் உள்ள ஐக்கிய நாடுகள் அவைக்கான திருப்பீடத்தின் நிரந்தர தூதுக்குழு, அதன் 17-வது ஆண்டு பல்மத அமைதிக்கான பணிக் குறித்து நடத்திய கூட்டமொன்றில் திருத்தந்தையின் இந்தக் கருத்தை வெளிப்படுத்தினர். "உலகளாவிய வன்முறையை எதிர்ப்பதே இந்தக் கூட்டத்தின் நோக்கமாகும்" என்றும், வார்த்தைகளையோ அல்லது மதத்தையோ ஆயுதங்களாகத் தவறாகப் பயன்படுத்த வேண்டாம்" என்று மக்களை வலியுறுத்துவதாகக் கூறினார் ஐ.நா. அமைப்புக்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களுக்கான திருப்பீட பிரதிநிதி பேராயர் எத்தோரே பலஸ்த்ரேரோ. இக்கூட்டத்தில் 300 தூதரக அதிகாரிகள், அரசுத் தூதர்கள் மற்றும் மதத் தலைவர்கள் கலந்து கொண்டு, திருத்தந்தையின் 2026-ஆம் ஆண்டுக்கான உலக அமைதி செய்தியில் கூறப்பட்டுள்ள "ஆயுதங்களற்ற மற்றும் ஆயுதங்களைக் களைந்த

அமைதி” என்ற மையக்கருத்தை எடுத்துக்காட்டும் வகையில் உரையாற்றினர். அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அறிக்கை, உலகளவில் 130 செயலில் உள்ள ஆயுத மோதல்களை எடுத்துக்காட்டுகிறது மற்றும் வாழ்க்கையையும் அமைதிக்கான பாதைகளையும் பாதுகாப்பதில் மனிதாபிமான சட்டத்தின் முக்கிய பங்கை வலியுறுத்துகிறது.

## உலகளாவியப் பரிந்துரையாளர்களாக மாற இளைஞர்களுக்கு அழைப்பு

உலகளாவிய பரிந்துரையாளர்களின் அடுத்த தலைமுறையாக மாற இளைஞர்களுக்கு அழைப்பு விடுத்தார் திருத்தந்தை பதினான்காம் லியோ. திருத்தந்தையின் உலகளாவிய இறைவேண்டல் வலையமைப்பின் தலைவர் மற்றும் அதன் உறுப்பினர்களைத் திருப்பீடத்தில் சந்தித்த போது இவ்வாறு அழைப்புவிடுத்த திருத்தந்தை, இளைஞர்களை இறைவேண்டல் பணியில் ஈடுபடுத்துமாறு கேட்டுக்கொண்டார். “இளைஞர்களை இவ்வலையமைப்பில் பங்கேற்க அழைப்பது மிகவும் முக்கியமானது” என்றும், ”இதனால் அவர்கள் முழு உலகத்தின் தேவைகளுக்கும் அடுத்த தலைமுறை பரிந்துரையாளர்களாக உருவாகலாம்” என்றும் நம்பிக்கை தெரிவித்த திருத்தந்தை, இளைஞர்கள் இயேசுவுடனான தங்களின் உறவை ஆழப்படுத்துவதற்கான ஒரு பாதையாக நற்கருணை இளைஞர் இயக்கத்தை எடுத்துக்காட்டினார். பல்வேறு கலாச்சாரங்களையும் மொழிகளையும் ஒன்றிணைக்கும் இந்த வலையமைப்பில் பரந்த அளவிலான பங்கேற்பை ஊக்குவித்ததுடன், தனது மாதாந்திர இறைவேண்டல் நோக்கங்களை உலகெங்கிலும் உள்ள இலட்சக் கணக்கான மக்களுக்குப் பரப்புவதில் அதன் பங்களிப்பைப் பாராட்டிய திருத்தந்தை, திருஅவையின் நற்செய்தி அறிவிப்புப் பணியின் ஒருங்கிணைந்த பகுதி இறைவேண்டல் என்பதை அவர்களிடம் வலியுறுத்தினார்.

## அனைத்துலகளவில் புலம்பெயர்ந்தோருக்கு ஆதரவளிக்கிறது திருஅவை

புதிதாக நியமிக்கப்பட்ட ஐக்கிய நாடுகள் அவையின் புலம்பெயர்ந்தோருக்கான உயர் ஆணையர் பர்ஹாம் சாலிஹ் அவர்கள், திருப்பீடத்தில் திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்களைச் சந்தித்து, தற்போதைய புலம்பெயர்ந்தோர் நெருக்கடி மற்றும் உதவி வழங்குவதில் திருஅவையின் முக்கிய பங்களிப்பு குறித்து விவாதித்ததை வத்திக்கான் செய்திகளுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் விளக்கியுள்ளார். இவ்வாண்டு ஜனவரி மாதத்தின் தொடக்கத்தில் தனது பொறுப்பை ஏற்றுக்கொண்ட சாலிஹ் அவர்கள், தற்போது உலகளவில் 11.73 கோடியாக அதிகரித்து வரும் புலம்பெயர்ந்தோரின் எண்ணிக்கையை நிவர்த்தி செய்வதில் உலகளாவிய ஒத்துழைப்பின் அவசரத்தை வலியுறுத்தியுள்ளார். இறுதியாக, “மோதல்களைத் தடுப்பதற்கும், புலம்பெயர்ந்தோர் தங்கள் வாழ்க்கையை மாண்புடனும் பாதுகாப்புடனும் மீண்டும் கட்டியெழுப்ப அனுமதிக்கும் நிலையான தீர்வுகளைக் கண்டறிவதற்கும் சமூகம் இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும்” என்று சாலிஹ் அவர்கள் வலியுறுத்தி தனது நேர்காணலை நிறைவு செய்தார்.

# சுடர் வாசகர் போட்டி 130

## சரியான விடைகள்

1. வானம் திறந்து கடவுளின் ஆவி அவர்மீது வந்திறங்கியது.
2. மம்மா மார்கரெட்
3. புனித குரியாக்கோஸ் எலியாஸ் சவேரா
4. இயேசுவின் பிறப்பு, திருமுழுக்கு, ஞானிகளின் வருகை மற்றும் கானாவூர் திருமணம்
5. அருள்தந்தை ஜான் பாப்டிஸ்ட் புத்தாரி
6. புனித வனத்து அந்தோணியார்
7. மூன்று நாள், மோட்ச இராக்கினி மாதா திருவிழாவிற்கு ஆயத்தமாக மறையுரை ஆற்ற
8. "கடவுளின் மாட்சிமை"
9. அருளாளர் லவுரா விகூஞா
10. 12
11. உண்மையை அறிந்தவர்களாயும் இருப்பீர்கள், உண்மை உங்களுக்கு விடுதலையளிக்கும் என்றார்.
12. 1745ம் ஆண்டு மேமாதம் 14ம் நாள்.
13. 1897ம் ஆண்டு, அருளாளர் பொரொனிஸ்லாவ் மார்க்குவிச்
14. குருத்துவ மாண்பே மற்ற உலகப் பதவிகளைவிட மேன்மையானது
15. குழந்தைகள் மறைக்கல்வி, இளைஞர்கள் மறைக்கல்வி, வயது வந்தோருக்கான மறைக்கல்வி



## குலுக்கல் முறையில் பரிசு பெற்றவர்கள்

Mr. S. Alex, Karaikal
Mr. Irudayaraj, Bangalore
Ms. Agnes, Katpadi

# சுடர்

## வாசகர் போட்டி 131

1. திருத்தந்தை 6ம் பயஸ், எந்த ஆண்டு திருஇருதய ஆண்டவருக்கு திருஅவையை அர்ப்பணித்தார்?
2. நோன்பு நம்மை எவ்வாறு மாற்றுகிறது?
3. பளுவான சுமையைக்கட்டி மக்களுடைய தோள்மேல் யார் வைத்தனர்?
4. 1905ல் சீன மறைப்பணிக்காக முதன்முதலாக ஒரு சலேசிய குழு, யாருடைய தலைமையில் சென்றது?
5. கடவுளைப் பற்றி பேசுவதில் இரவு முழுவதையும் செலவழித்தார்கள் யார்?
6. தூய அன்னை மரியாள் எழுவருக்கும் காட்சி அளித்து எதற்காக அழைப்பு விடுக்கின்றார்?
7. மாற்கு 9:49 நற்செய்தியில் இயேசு என்ன கூறுகிறார்?
8. திருத்தந்தை 12ம் லியோ அவர்கள் திருஅவையின் மருத்துவர் என்று யாரை அழைத்தார்?
9. மெத்தோடியுஸ் என்ன படத்தை வரைந்து அரசனுக்கு விளக்கினார்?
10. தன்னையே முழுவதும் இயேசுவுக்கு அர்ப்பணித்த கன்னியர் யார்?
11. புனித லூர்தன்னை1858ம் ஆண்டு மார்ச் திங்கள் 25ம் நாள் யாருக்கு காட்சி கொடுத்தார்?
12. புனித கொன்சாலோ கார்சியா யாருடன் சேர்ந்து பணியாற்றினார்?
13. சிரில் தமது அறிவுத் திறமையால் எல்லா கலைகளையும் கற்றுத் தேர்ந்து, என்னப் பட்டத்தைப் பெற்றார்?
14. மனிதனை வழிநடத்த யாரிடம் 10 கட்டளைகளைக் கொடுத்து தன்னோடு இணைத்துக் கொண்டார்?
15. அன்னையின் விண்ணேற்புப் பெருவிழா எப்பொழுது கொண்டாடப்படுகிறது?

### தீபகச் சுடர்

**அன்பு வாசகர்களே!**

இறைவார்த்தையை தீபகச் சுடர் மின்னிதழ் வழியாக அனைவருக்கும் எடுத்துரைக்கும் பணியில் எங்களோடு இணைந்து பயணிப்பதற்கு நன்றி. இந்த மின்னிதழை நீங்கள் வாட்சப் மூலம் இலவசமாகப் பெற்று பிறருக்கும் பகிரலாம். இந்த பணிக்கு தன்னார்வ தொண்டர்கள் தங்கள் திறமை, நேரத்தை வழங்கி உதவலாம். முடிந்தவர்கள் நன்கொடையாகவும் தந்து இப்பணியை தாங்கலாம்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை - 600 010.
கைப்பேசி எண் : 9385201453

# அடுத்த சுடரில்

## பகுதி-1
## வழிபாட்டு வழிக்காட்டி

தவக்காலம் இரண்டாம் ஞாயிறு

புனித கசிமீர்

புனிதையர் பெர்பெத்துவா, பெலிசிட்டி

தவக்காலத்தின் 3ம் ஞாயிறு

உரோமை நகர்ப் புனித பிரான்சிஸ்

சிலுவைப் பாதை

தவக்காலத்தின் 4ம் ஞாயிறு

புனித பேட்ரிக்

வழிபாட்டு வழிகாட்டி

புனித யோசேப்பு புனித கன்னிமரியாவின் கணவர் பெருவிழா

தவக்காலத்தின் 5ம் ஞாயிறு

ஆண்டவரின் பிறப்பு அறிவிப்பு பெருவிழா

ஆண்டவருடைய பாடுகளின் குருத்து ஞாயிறு

## பகுதி-2
## நம்பிக்கையில் வளர...

சிலுவைப் பாதை

புனித யோசேப்பு, கன்னிமரியாவின் கணவரின் வாழ்க்கை வரலாறு

குருத்து ஞாயிறு தரும் செய்தி என்ன?

திருஅவைச் செய்திகள்

# பிப்ரவரி மாதத்திற்கான திருப்பலி வாசகங்கள்

| தேதி | நாள் | திருநாட்கள் | வாசகம் | நற்செய்தி |
|---|---|---|---|---|
| 01 | ஞா | ஆண்டின் பொதுக்காலம் 4ம் ஞாயிறு | I. செப். 2: 3, 3: 12-13<br>II. 1கொரி. 1: 26-31 | மத். 5: 1-12 |
| 02 | தி | ஆண்டவரைக் காணிக்கையாக அர்ப்பணித்தல் விழா | I. மலாக். 3: 1-4<br>II. எபி. 2: 14-18 | லூக். 2: 22-40 |
| 03 | செ | புனித ப்ளேஸ் மற்றும் புனித ஆன்ஸ்கார் | 2சாமு. 18: 9-10,14, 24-25, 30-19:3 | மாற்கு 5:21-43 |
| 04 | பு | புனித ஜான் தெ பிரிட்டோ | எபி.13: 15-17, 20-21 | யோவா. 12: 24-26 |
| 05 | வி | புனித ஆகத்தா | 1அர. 2: 1-4, 10-12 | மாற்கு 6: 7-13 |
| 06 | வெ | புனித பால்மிக்கி | சீஞா. 47: 2-11 | மாற்கு 6: 14-29 |
| 07 | ச | புனித கொன்சாலோ கார்சியா | 1அர. 3: 4-13 | மாற்கு 6: 30-34 |
| 08 | ஞா | **ஆண்டின் பொதுக்காலம் 5ம் ஞாயிறு** | I. எசா. 58: 7-10<br>II. 1கொரி. 2: 1-5 | மத். 5: 13-16 |
| 09 | தி | அருளாளர் யூசேபியா பாலோமினா ஏனெஸ் | 1அர. 8: 1-7, 9-13 | மாற்கு 6: 53-56 |
| 10 | செ | புனித ஸ்கொலாஸ்திகா | 1அர. 8: 22-23, 27-30 | மாற்கு 7: 1-13 |
| 11 | பு | லூர்துநகர் புனித அன்னை மரியா | 1அர. 10: 1-10 | மாற்கு 7: 14-23 |
| 12 | வி | | 1அர. 11: 4-13 | மாற்கு 7: 24-30 |
| 13 | வெ | | 1அர. 11: 29-32,12: 9 | மாற்கு 7: 31-37 |
| 14 | ச | புனிதர்கள் சிரில், மெத்தோடியஸ் ஆயர் | 1அர. 12: 26-32, 13: 33-34 | மாற்கு 8: 1-10 |
| **15** | **ஞா** | **ஆண்டின் பொதுக்காலம் 6ம் ஞாயிறு** | **I. சீஞா. 15: 15-20<br>II. 1கொரி. 2: 6-10** | **மத். 5: 17-37** |
| 16 | தி | | யாக். 1: 1-11 | மாற்கு 8: 11-13 |
| 17 | செ | மரியின் ஊழியர் சபை நிறுவிய ஏழு புனிதர்கள் | யாக். 1: 12-18 | மாற்கு 8: 14-21 |
| **18** | **பு** | **திருநீற்றுப்புதன் தவக்காலம்** | **I. யோவே. 2: 12-18<br>II. 2கொரி. 5: 20-6: 2** | **மத். 6: 1-6, 16-18** |
| 19 | வி | | இச. 30: 15-20 | லூக். 9: 22-25 |
| 20 | வெ | | எசா. 58: 1-9 | மத். 9: 14-15 |
| 21 | ச | புனித பீட்டர் தமியான் | எசா. 58: 9-14 | லூக். 5: 27-32 |
| **22** | **ஞா** | **தவக்காலம் முதல் ஞாயிறு** | **I. தொ.நூ. 2: 7-9, 3: 1-7<br>II. உரோ. 5: 12-19** | **மத். 4: 1-11** |
| 23 | தி | புனித போலிக்கார்ப்பு | லேவி. 19: 1-2, 11-18 | மத். 25: 31-46 |
| 24 | செ | | எசா. 55: 10-11 | மத். 6: 7-15 |
| 25 | பு | | யோனா. 3: 1-10 | லூக். 11: 29-32 |
| 26 | வி | | எஸ் 4: 17 | மத். 7: 7-12 |
| 27 | வெ | | எசே. 18: 21-28 | மத். 5: 20-26 |
| 28 | ச | | இச. 26: 16-19 | மத். 5: 43-48 |
| | | | | |
| | | | | |


TO SHARE THE LIGHT
தீபகம் - தொன் போஸ்கோ
நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்
வழங்கும்
கூற்றம்
(கலங்கம்)
(தவக்கால சிறப்பு ஒலி-ஒளி நிகழ்ச்சி)
தவக்காலத்திலே
இறை இயேசுவின்
பாடுகளை
இணைந்து சிந்திக்க
ஒரு முயற்சி
உங்கள் பங்குகளில் அரங்கேறத் தொடர்பு கொள்க :
இயக்குநர்-தீபகம் : அருட்பணி. ஜேசுதாஸ் ச.ச +91 9385201453


தீபகம் தொன் போஸ்கோ
நம்பிக்கை மற்றும் விழுமியக் கல்வி மையம்
வழங்கும்
சிறப்பு தவக்கால
சிலுவைப் பாதை
புத்தகங்கள் (தமிழ் - ஆங்கிலம்)
சிலுவையோடு
நடக்க... வாழ... வழிநடத்த...
ஐந்து பாதைகள்
TAKE UP YOUR CROSS AND
follow me
- Luke 9:23
SR. SARAL SCB
FOLLOW ME
DEEPAGAM
ஆசிரியர் : புல்லோன் ஜோ லூயிஸ்
Editor : Sr. SARAL SCB
சிறுவர்கள், துறவிகள், குடும்பங்கள், இளையோர் என அனைவருக்கும் ஏற்ற வகையில்
சிந்தனைகள் கொண்ட சிலுவைப் பாதை புத்தகம் கிடைக்கும்.

# *Hearty Welcome*

to our beloved Rector Major


# Rev. Fr. FABIO ATTARD SDB

to the

## Salesian Province of Chennai

Salesians of Don Bosco

13th to 17th Feb.2026




தயாரிப்பு : **DEEPACT** (Deepagam Proclamation And Cultural Team)

கணினியேற்றம் : **கபிரியேல் மேரி** வடிவமைப்பு : **ஜான் அலெக்சாண்டர்** - DEEPACT

தயாரிப்பில் மேற்பார்வை : **சாண்டோ, ஈசாக், மரிய சந்தோஷ், மரிய ஜேம்ஸ்**